# மனைவியுடன் மகிழ்ச்சியாக
# வாழ்வது எப்படி?



பல்கலைப் பேரறிஞர்

டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா
M.A.,M.P.Ed.,Ph.D.,D.Litt.,D.Ed., FUWAI

# மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி!


தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

பல்கலைப் பேரறிஞர்

**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI

முன்னாள் பேராசிரியர், ஆய்வுத்துறைத் தலைவர்,

ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்விக் கல்லூரி,

சென்னை - 600 035.



## ராஜ்மோகன் பதிப்பகம்

'லில்லி பவனம்'

8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு,

தி.நகர், சென்னை - 600 017.

தொலைபேசி : 044-24332696

SILVER JUBILEE YEAR 1970-95

RAJMOHAN PATHIPPAGAM

## நூல் விபர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி? |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | மனநல நூல் |
| ஆசிரியர் | : | டாக்டர்.எஸ்.நவராஜ் செல்லையா (1937-2001) |
| முதல் பதிப்பு | : | 1979 |
| இரண்டாம் பதிப்பு | : | ஜுன் - 2009 |
| நூலின் அளவு | : | கிரவுன் |
| படிகள் | : | 1200 |
| அச்சு | : | 12 புள்ளி |
| தாள் | : | வெள்ளை |
| பக்கங்கள் | : | 96 |
| நூல்கட்டுமானம் | : | பேப்பர் அட்டைக்கட்டு |
| **விலை** | : | **ரூ. 30.00** |
| உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| தயாரிப்பு | : | ஆர். ஆடம் சாக்ரட்டீஸ் |
| வெளியிட்டோர் | : | **ராஜ்மோகன் பதிப்பகம்**<br>**'லில்லி பவனம்'**<br>8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு<br>தி.நகர், சென்னை-600 017. |
| அச்சிட்டோர் | : | கலர்விங்ஸ்<br>சென்னை - 600 005. |

# பதிப்புரை

விளையாட்டுத்துறை இலக்கியத்தின் தந்தை என்றும், பல்கலைப் பேரறிஞர் என்றும் பாராட்டப்படுகின்ற, டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா அவர்கள், விளையாட்டுத்துறை தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கான பணியைத் தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு பணியாற்றினார்.

திருமூலர், திருவள்ளுவர், வள்ளலார் போன்றவர்களுக்குப் பிறகு, தேகத்தின் தெய்வாம்சம் பற்றி மக்களிடையே, மகிமையை வளர்க்கும் விளையாட்டுத்துறை இலக்கியப்பணியை புத்தகங்கள், பத்திரிகைகள், வானொலி தொலைக்காட்சி மூலமாக நாற்பது ஆண்டுகளாக செய்து வந்தார்.

விளையாட்டு பற்றிய கட்டுரை, கவிதை, சிறுகதைகள், நாவல் மற்றும் தனி மனித முன்னேற்றம் பற்றிய பொது அறிவு நூல்கள், ஆய்வு நூல்கள் என இதுவரை 150க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்.

முற்றிலும் மாறுபட்ட ஒரு நூலக நல்ல அனுபவத்துடன் வாசகர்களுடன் பகிர்ந்து கொண்ட தகவல்களோடு இந்நூலை எழுதியுள்ளார்.

'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்றார் கவியரசு கண்ணதாசன்.

மனைவி என்ற மந்திரச் சொல்தான் ஒரு மனிதனை மனிதனாக மாற்றக்கூடிய வல்லமை பெற்றது என்றால், யாராவது மறுப்பார்களா?

எத்தனை பெரிய மனிதர்களானாலும், பணக்காரன், ஏழை என்ற பாகுபாடு இல்லாமல் இல்வாழ்க்கையில் அடி எடுத்து வைக்க வாழ்க்கைத் துணையாக வந்து குடும்பத்தைத்தாங்கி, சமுதாயத்தில் கணவனுக்கென்று ஒரு மரியாதைத் தேடித்தருபவர் மனைவி.

நல்ல குழந்தைகளைப் பெற்று நல்ல பெற்றோர்களாகவும், மருமக்களைப் பெறவும், தேடிவந்த உறவுகளைப் பேணிகாக்கவும் மனைவியின் கடமை அளப்பறியது.

அப்படிப்பட்ட உயர்ந்த இடத்தில் இருக்கும் மனைவியோடு உறவு கொள்வதும், விட்டுக் கொடுத்து வாழ்வதும் ஓர் அற்புதமான கலை என்றே சொல்லலாம்.

இல்லறத்தின் இனிய அனுபவங்களை கேள்விபதிலாகத் தந்து புதுமணத் தம்பதிகளுக்கு நல்வழி காட்டுகிறார் டாக்டர்.எஸ். நவராஜ் செல்லையா.

இல்வாழ்க்கையில் ஈடுபடும் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய அற்புதமான தகவல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

படியுங்கள், சுவையுங்கள், வாழ்வில் வெற்றி பெறுங்கள்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு இரண்டாம் பதிப்பாக இந்நூல் வெளிவருகிறது.

இனிய வாழ்த்துக்கள்

அன்புடன்
ஆர். ஆடம் சாக்ரட்டீஸ்
பதிப்பாளர்

# என்னுரை

இந்நூல் ஓர் உடல் நல நூல்.

இன்னும் சொல்லப் போனால், இது ஒரு இதமான உடல் நலத்தினால் எழுப்பப்படும் பதமான மனோபலத்தை ஊட்டும் மன நல நூல் என்றும் சொல்லலாம்.

ஏறத்தாழ அறுபது நூல்களுக்கு மேல் உடலுக்குப் பலத்தையும் வளத்தையும் ஊட்டுகின்ற உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுத்துறை நூல்களை எழுதி வந்த நான், இந்தத் தலைப்பில் நூல் எழுத முனைந்ததற்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு.

கல்லூரியில் உடற்கல்வி இயக்குநராக இருந்தபோதும், சென்னை டி.வி.எஸ். நிறுவனங்களில் மனமகிழ் மன்ற மேலாளராகப் பணியாற்றிய சமயங்களிலும், உடலழகுப் பயிற்சிப் பள்ளி என்று தொடங்கிய உடற்பயிற்சிப் பள்ளியிலும் என்னை அணுகிய இளைஞர்களும், மணமான நண்பர்களும் கேட்ட கேள்விகளைத் தொகுத்து, அவற்றிற்குப் பதிலாகத் தான் இந்த நூலை இப்பொழுது படைத்துள்ளேன்.

உடலுக்குப் பலத்தை உண்டாக்கி விடுவது கடினம் என்றாலும், முயன்றால் அது சுலபமே. ஆனால் உருவாக்கிக் கொண்ட உடல் பலத்தை, வீணாக்கி விடாமல் கட்டிக்காத்து வாழ்வது என்பது முயன்றாலும் கடினமே!

என்றாலும், பலம் வீணாகத்தான் போகும். ஆனால் பழுதாக்கி விடாமல், பாழாக்கி விடாமல் பாதுகாத்துக் கொள்வது தான் புத்திசாலித்தனமாகும்.

நீ அதிகமாக சம்பாதிப்பதால் மட்டும் பணக்காரன் ஆகிவிட முடியாது. ஆனால், சேர்த்து வைப்பதால் மட்டுமே பணக்காரன் ஆகிட முடியும் என்று ஒரு பழமொழி உண்டு. அதையே உடல் நலம் என்று கூறக்கூடிய செல்வத்திற்கும் சொல்லலாம்.

வாழ்க்கையை ஒரு மண்குடத்திற்கு ஒப்பிட்டுக் கூறுவார்கள். அந்த மண்குடத்தில் நிறைய தண்ணீர் இருக்கிறது. அது ஓட்டையில்லாத குடம் என்றாலும், நீர் கசிந்து கசிந்து வெளியேற, நீர் அளவில் குறைந்து கொண்டே வருகிறது.

நாளாக நாளாக நீர் குறையும். ஒரு நாள் குடம் வெறுங்குடமாக வீற்றிருக்கும் என்பது போல, உடல் ஒரு மட்குடம் என்றால், உடலில் உள்ள சக்தி என்பது நீராக இருக்கிறது.

நம்மையறியாமலேயே நீர் கசிவது போல், சக்தி செலவாகிக் கொண்டேதான் இருக்கிறது. அதை உணர்ந்து சிக்கனமாக, சக்தியை, பலத்தை செலவழித்தால், நீண்ட நாள் நிம்மதியாக, நலமாக வாழ முடியும்.

இருக்கிறதே என்று இறைத்து விட்டால், எல்லாம் பாழாகும். அதற்குத்தான் உடல் நலத்தை வளர்த்திட நூல்கள் எழுதிய நான், இளைஞர்கள் வேண்டுகோளுக் கிணங்க, உடல் நலத்தைக் காக்கும் உபாயத்தினை விளக்க, இந்நூலை எழுதத் துணிந்தேன்.

இளைஞர்கள் எல்லோரும் ஒரு நாள் இல்லறத்தில் ஈடுபடுவது இயற்கைதான். அது தான் இனிமையான வாழ்க்கையுங் கூட.

அத்தகைய ஆர்வத்தில் அலைபாய்ந்து நடக்கும் இளைஞர்கள், எத்தனையோ கனவுகளில் இலயித்துக் கிடந்தாலும், இடையிடையே குழப்பங்களிலும், குதர்க்கவாதங்களிலும் குமுறி எழுந்து, குன்றிப் போயும் கிடக்கின்றார்கள்.

என்னை அணுகிய இளைஞர்களுக்கும், மணமான நண்பர்களுக்கும், உடற்கல்வித் துறையில், பயிற்சித் துறையில் மனம் ஒன்றி ஈடுபட்டவன் என்ற முறையில், பல வினாக்களுக்கு விடையளித்து, சந்தேகங்களைத் தீர்த்தது மட்டுமன்றி, சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தேறி வெளியேற்றும் பல யுக்திகளையும் கூறினேன்.

அந்த கருத்துக்களின் தொகுப்புதான் இந்நூலாகும். இந்நூலைப் படிக்கும் அன்பர்கள், வாழ்க்கை மகிழ்ச்சியாக வாழ்வதற்கே என்ற தத்துவத்திற்கேற்ப, வழிகாட்டும் நூல் என்றே ஒப்புக் கொள்வார்.

ஒருவருக்கொருவர் துணையாக மனைவியும் கணவனும் இருக்கிறார்கள். வாழ்கின்றார்கள். அவர்கள் மகிழ்ச்சியாக வாழவேண்டுமானால் எப்படி என்ற ஓர் கேள்விக்கு விடையாகத்தான் இந்த நூலை உருவாக்கி இருக்கிறேன்.

மகிழ்ச்சியாகத் தொடர இனிய நடையில் நூலை எழுதி இருக்கிறேன். மகிழ்ச்சியாக வாழ கருத்துக்களைத் தொகுத்து இருக்கிறேன். மகிழ்ச்சியாக வாழ வாழ்த்துகிறேன்.

ஞானமலர் இல்லம்
சென்னை-17.

எஸ். நவராஜ் செல்லையா

# உள்ளே.....


1. திருமணம் ஏன்? 9
2. திருமணம் என்றால் என்ன? 20
3. பெண்ணென்றால் புரியாத புதிர் 28
4. உறவும் நிறைவும் 41
5. மகிழ்ச்சியுடன் வாழும் ரகசியம் 68


*****

# 1. திருமணம் ஏன்?

“நிம்மதியாக நான் வாழ விரும்புகிறேன்! என்னைத் தனியாக இருக்க விடுங்கள். எனக்குக் கல்யாணமே வேண்டாம். மீறி என்னை வற்புறுத்தினால், நான் என்ன சொல்வேன், என்ன செய்வேன் என்பது எனக்கே தெரியாது.”

ஆத்திரம் பொங்க தன் அம்மாவிடம் பதில் சொல்லிக் கொண்டிருந்தார் வாசு. அவனைப் பார்த்து, அழுவதா அல்லது வசை பாடுவதா என்று ஒன்று புரியாமல் வீட்டிற்குள் போகச் சொல்லிச் சைகை செய்தார்.

ஊரிலிருந்து வந்த தன் அண்ணன் உலக நாதரை ஏக்கத்துடன் பார்த்தாள். உலகநாதரும் தன் தங்கையை வீட்டிற்குள் போகச் சொல்லி சைகை செய்தார்.

“எப்படியோ நீங்கள் தான் அவன் மனதை மாற்ற வேண்டும். என் வயிற்றில் பால் வார்க்க வேண்டும்” என்று கெஞ்சுவது போல, ஒரு பார்வை பார்த்து விட்டு வீட்டிற்குள் சென்று விட்டாள்.

இதுவரை ஆழ்ந்த சிந்தனையுடன் தரையை பார்த்துக் கொண்டிருந்த வாசு, தலையை நிமிர்த்திப் பார்த்தான். தன் தாய்மாமன் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், சிறிது சங்கடப்பட்டான். அந்த நிலைமையை சமாளிக்கவும் முயன்றான் வாசு. மெதுவாகக் கனைத்துக் கொண்டான்.

"பாருங்கள் மாமா! வீட்டிற்குள் வந்தால் தினம் இதே பாட்டுதான். காக்கையாய் கத்தி கரையானாய் அரித்து, கல்யாணம் என்று என்னைப் போட்டுத் தொந்தரவு செய்தால், நான் எப்படி நிம்மதியாக வாழ முடியும்? எனக்கு வீட்டிற்குள் வரவே பிடிக்கவில்லை. வெளியே ஓடிப்போகவும் வழியில்லை. நீங்கள் ஊருக்குப் போவதற்குள், இதற்கொரு முடிவு செய்துவிட்டுப் போனால், உங்களை என் உயிர் உள்ளளவும் மறக்கமாட்டேன்" என்று கையெடுத்துக் கும்பிட்டான் வாசு.

இவ்வளவு விநயமாக கும்பிடும் வாசுவைப் பார்த்து, உலகநாதர் மனம் நெகிழ்ந்து போனார். தன் தங்கை தேவைக்கு அதிகமாகவே வாசுவை வற்புறுத்தியிருக்கிறாள், வருத்தப்படுத்தியிருக்கிறாள் என்பதையும் நன்கு புரிந்து கொண்டார். அவளுக்கு அவன் ஒரே மகன் தானே! ஆதங்கம் இருக்காதா?

வாசுவின் மன நிலையைப் புரிந்து கொண்டால்தான், மேற்கொண்டு பேசமுடியும் என்று தனக்குள்ளே சிந்தனையில் ஆழ்ந்து போனார் உலகநாதர்.

என்ன மாமா? நான் கேட்கிறேன்! நீங்கள் பேசாமல் இருக்கிறீர்களே? எனக்கு எப்படி உதவப் போகிறீர்கள் என்று பரிதாபமாகக் கேட்டான் வாசு.

நீ சொல்வது தான் சரி. உனக்குக் கல்யாணம் செய்து கொள்ள விருப்பம் இல்லையென்றால், பிடிக்கவில்லையென்றால் நான் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். நீதான் காரணமில்லாமல் எதுவும் பேசமாட்டாயே?

ஆமாம் மாமா! எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லைதான். கல்யாணம் செய்து கொள்ளாமல்

எத்தனையோ பிரம்மச்சாரிகள் எவ்வளவோ நிம்மதியாக வாழ்கிறார்கள் தெரியுமா? இந்த சம்சார சாகரத்தில் என்னைப் போய் ஏன் தான் அழுத்தப் பார்க்கிறார்களோ அம்மா? அது தான் எனக்குப் புரியவில்லை என்று வாசுவே வாதத்தைக் கிளப்பினான்.

சம்சார சாகரம் என்றாயே? அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? என்று பேச்சை தொடங்கியதால், தாய் மாமனை அர்த்தம் புரியாமல் பார்த்தான் வாசு.

சம்சாரம் என்ற வடமொழிச் சொல்லுக்கு அர்த்தம் நான் கூறுகிறேன். சம் என்றால் நல்ல என்று அர்த்தம். சாரம் என்பது நல்லவைகளிலிருந்து நல்லவைகளைப் பெறுதல் என்று பொருள் தரும். நல்லவைகளிலிருந்து நல்லனவற்றை வாழ்க்கையில் நிறையப் பெறுவதைத்தான் சம்சார சாகரம் என்கிறார்கள் என்று விளக்கம் கூறினார் உலகநாதர்.

ஏதோ அர்த்தம் சொல்லி என்னை ஏய்க்கப் பார்க்கிறீர்கள். ஏதோ சொர்க்கம் என்று எண்ணிக்கொண்டு தேடிப் போய் கல்யாணம் செய்து கொண்டு, கழுத்தறுப்பட்ட கோழி போல, உடல் தொடர்பையிழந்த பல்லியின் வால் போல, மக்கள் துடிப்பதைப் பார்த்தால், இது போல அர்த்தம் சொல்ல உங்களுக்கு எப்படி மாமா மனம் வந்தது? என்று மாமாவை மடக்கினான் வாசு.

கல்யாணம் செய்து கொண்டவர்கள் எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள், துடிக்கிறார்கள், துவள்கின்றார்கள் என்று உனக்கு யார் சொன்னது?

"தினந்தோறும் தான் நான் பார்க்கிறனே? கல்யாணம் செய்து கொள்வதற்குமுன், அழகான உடையணிந்து கொண்டு, சிரித்த முகமாக, களையான முகத்துடன்

வாழந்தவர்கள், கல்யாணம் ஆன சில நாட்களுக்குள்ளே ஆளே மாறி, களையிழந்து, கண்குழி விழுந்து, கன்னங்கள் ஒட்டி, நடை தடுமாறி நடமாடுகின்றார்களே? இதற்கென்ன சொல்கிறீர்கள்" என்றான் வாசு.

உலகநாதர் பேசாமல் இருக்கவும், இது தான் சமயமென்று வாசு, மேலே தன் குற்றச் சாட்டைத் தொடர்ந்து கூறினான்.

அப்படியே, ஒருசில தம்பதிகள் தங்கள் உடலை அழகாக வைத்துக் கொண்டாலும், வீட்டுக்குள்ளே எப்பொழுது பார்த்தாலும் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். மனதிலே சாந்தியில்லாமல் என் நண்பர்கள், மற்றும் தெரிந்தவர்கள் எல்லோரும் அவதிப்படுவதை நானே என் கண்களாலேயே பாத்திருக்கிறேனே!

பெண்களால் தானே மாமா, இப்படிப் பிரச்சினைகள் மிகுதியாகின்றன! அவர்கள் மனதை அறிய முடியாது என்று பைபிளில் ஒரு உவமை வருகிறது. உங்களுக்கு தெரியுமா?

என்னப்பா அது?

"பாறையில் போகும் பாம்பின் பாதையைஅறிந்து கொள்ளலாம். கடலில் போகின்ற கப்பலின் வழியைத் தெரிந்து கொள்ளலாம். வானில் பறக்கின்ற பறவையின் போக்கைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் ஒரு பெண்ணின் மனதைப் புரிந்து கொள்ளவே முடியாது". இப்படிக் கூறியிருப்பது உண்மை தானே மாமா?

அப்படிப்பட்ட பெண்ணை நன்றாகப் புரிந்து கொண்டு, 'பூலோக சொர்க்கம்' என்று பெண்களைப் போற்றியும் பாடியிருக்கிறார்களே புலவர்கள்! அதற்கென்ன நீ பதில் சொல்லப் போகிறாய்?

அவர்கள் தெரியாமல், பாடியிருக்கிறார்கள் மாமா! ஒரு வேளை, அவசரத்தில் கூட பாடியிருக்கலாம்!

இல்லை. அவர்கள் தெரிந்து தான் பாடியிருக்கிறார்கள். உள்ள பூர்வமாக உணர்ந்து உலகுக்குக் கூறியிருக்கிறார்கள் "பெண்ணை எவன் புரிந்து கொள்கிறானோ, அவன்தான் பேரின்பம் காண்கிறான்" என்ற முதுமொழி உனக்குத் தெரியுமா?

நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே!

நிலைக் கண்ணாடியின் முன்னே நின்று கொண்டு, நாம் எப்படி பார்க்கிறோமோ, அப்படித்தான் நமது முகம் அதில் தெரியும். அது போலவே, நாம் பெண்ணை எவ்வாறு நோக்குகிறோமோ, அவ்வாறுதான் நமக்கும் நினைக்கத் தோன்றும்.

"பெண்ணை நம்பாதே" என்று ஏன் பாடியிருக்கிறார்கள்' என்றான் வாசு.

'உன்னையும் நம்பாதே' என்று கூடத்தான் பாடியிருக்கிறார்கள். 'உலகே மாயம்' 'வாழ்வே மாயம்' என்றும் பாடவில்லையா? ஏன் தெரியுமா?

"மாயமான வாழ்வு தானே இது! மண்பாண்டம் போன்றது தானே நம் உடல்! அந்த மயக்கத்துடன் ஏன் போய் இந்த கல்யாண சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டும்" என்று எச்சரிக்கத்தான் அந்தப் பாட்டு என்றான் வாசு.

அப்படி இல்லை வாசு. 'நாளை நடப்பதை யாரறிவார்' என்ற நிலையில் தான் இந்த உலகம் இருக்கிறது. அதே நேரத்தில், உலகத்தில் இனிய வாழ்வும் ஏராளமாக அமைந்திருக்கிறது. அதற்குள்ளே, இந்த அற்புதமான பிறவியை ஆனந்தமாக வாழ்ந்துவிட வேண்டும்' என்று எச்சரிக்கத் தான் இப்படி பாடியிருக்கின்றார்கள்.

ஆனந்தம் எப்படி வரும்? அதை அடைய வேறு வழியேயில்லையா? கல்யாணம் செய்து கொண்டால் தான் ஆனந்தம் கிடைக்குமா?

ஆமாம் கல்யாணம் என்றால் ஆணுக்குத் துணையாகப் பெண்ணும், பெண்ணுக்கு துணையாக ஆணும் இருந்து வாழ்வது. அதில் அனுதினம் பெறுவதான் ஆனந்தம்.

'ஆதிகால மனிதனான ஆதாமுக்குத் துணையாகத் தானே ஏவாள் படைக்கப்பட்டாள்! அந்த ஏவாள் பேச்சைக் கேட்டதால்தானே இத்தனை துன்பமும்!

'நீ சரியாகப் புரியாமல் பேசுகிறாய்! ஆதாமுக்குத் துணையாகத் தானே ஏவாள் வந்தாள். துணையாக வந்தவளுடன் தொடர வேண்டியது தானே ஆதாம் தன் பயணத்தை, ஆதாம் என்ன செய்தான்? அவளை நம்பி, தன் சுய அறிவை இழந்தானே! இறைவன் எச்சரிக்கையையும் மீறி, அவன் பெண் பேச்சைக்கேட்டதால் தானே இன்பத்தை இழந்தான். வாழ்ந்த இடத்தை இழந்தான். எல்லாத் துன்பமும் பெறக் கூடிய வாழ்க்கையை அடைந்தான்.

"இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, சந்திரன் கெட்டதும் பெண்ணாலே'. என்று சரித்திரங்கள் கூறுகின்றனவே!

ஆணுக்குப் புலனடக்கம் இல்லை அதனால் வந்த வினை நடக்கும் போது தவறி கீழே விழுந்து விட்டு, நடந்த தரையின் மீது குற்றம் சொன்னால் எப்படி? பெண் தேவைதான். ஆனால் அந்தத் தேவையைத் தீர்த்துக்கொள்ளும் வழியில் தான் ஆளுக்குஆள், முறையும் வழியும் மாறுபடுகிறது.

எப்படியோ, பெண்களால் தான் எல்லோரும் கெட்டார்கள்! ஏவாள்தானே ஆதாமைக் கெடுத்தாள்!

துணையாக வந்தவளை வழிநடத்தி அழைத்துக் செல்ல வேண்டிய ஆதாம், அவள் அறிவுரையைக் கேட்டபொழுது அல்ல, சிந்திக்காது நடந்த போது தான் அனர்த்தம் ஏற்பட்டது. அறிவு இருந்து என்ன பயன்? பயன்படுத்த வேண்டாமா?

வாழ்க்கையை மகிழ்விக்க வருபவளைத்தாள் துணைவி என்கிறார்கள். மனையில் வாழ வந்ததால்தான் மனைவி என்கிறார்கள். மனைவி என்று கூறுகிறோமே, அதற்குப் பொருள் தெரிகிறதா?

வாசு பேசாமல் இருந்தான்.

மனைவி என்ற சொல்லை உச்சரிக்கும் பொழுது 'வி' என்ற எழுத்தை நாம் நம்மையறியாமலேயே 'வீ' என்று ஈகார ஒலியால் தானே சொல்கிறோம். அந்த 'வீ' என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் தெரியுமா?

வாசு நிமிர்ந்து அவர் முகத்தையே பார்த்தான்.

மலரின் நிலையை விளக்கிட வந்த புலவர்கள், செடியில் தோன்றத் தொடங்கியதை அரும்பு என்றார்கள். முளைத்து முட்டிக்கொண்டு வருவதை மொட்டு என்றார்கள். தேன், மணம், நிறம் எல்லாவற்றையும் வெளிக்கொண்டு வர, பொழுது பார்க்கிறது அது என்பதால், அதனை 'போது' என்றார்கள். காலம்பார்த்து மலர்ந்ததை 'மலர்' என்றார்கள். மலர்ந்த மலரை சிறிது நேரம் கழித்து'வீ' என்றனர்.

அதுபோலவே, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேதை, பெதும்பை, பேரிளம்பெண் என்று பெண்ணின் நிலையையும் ஏழு வகையாகப் பிரித்துப் பாடியிருக்கிறார்கள். உடலால் மலர்ந்திருந்து வாழ்க்கையாகக் காத்திருந்து

வாழ்வுக்குத் துணையாக ஆணுக்குப் பெண் வருவதால்தான், 'துணைவி',மனைவி என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

அதனால் யாருக்கு என்ன லாபம்?

லாபமே அங்குதான் ஆரம்பிக்கிறது வாசு. வாழ்க்கை வியாபாரத்தின் முதலீடு 'ஆண் பெண்' என்றால், பெறுகிற ஆனந்தம் தான் நிகரலாபம். அதுதான் வெற்றி. வியாபாரத்தைத் திறமையாகச் செய்யாவிட்டால், துன்பம் என்ற நஷ்டம் மட்டும் வருவதில்லை. வாழ்க்கையே படுத்துப் போய்விடும். ஊரும் உலகமும் ஏசும்.

வியாபாரிகள் நல்ல சுறுசுறுப்பின்றியும், மந்தமும் மதமதர்ப்பும் கொண்டிருந்தால், நஷ்டமும், தோல்வியும் ஏற்படும். அத்துடன் அவமானமும் நேரிடும்.

'திருமணத்தில் லாபம் என்றால் வெற்றி என்கிறீர்கள்' வெற்றி வந்து என்ன பயன்?

குறள் தெய்வமாம்சமாக இருந்ததால் தான்'திரு' என்ற அடைமொழி கொடுக்கப்பெற்று திருக்குறள் ஆயிற்று. தெய்வத்தைப் பற்றியப் பாடிய நூல்களுக்கே திரு என்று வழங்கப்பெற்றன. அதாவது, திருமுருகாற்றுப் படை என்பது போல, அது போலவே, ஆண் பெண் சேர்ந்து செய்கின்ற மணமும் தெய்வாம்சம் நிரம்பியிருக்கிறது என்பதால்தான். 'திருமணம்' என்று, பெயரிலே பக்திபெருக்கோடு அழைத்திருக்கின்றனர் நம் முன்னோர்கள்.

வெற்றி வந்து என்ன பயன் என்று கேட்டாயே! சொல்கிறேன்! ஒருவனுடைய வாழ்க்கையை பரிபூரணமான வாழ்க்கை, முற்றுப்பெற்ற வாழ்க்கை என்பதெல்லாம் திருமணமாகிக் குழந்தைகள் பெற்றபிறகுதான். இதற்கு உதாரணமாக ஒன்று சொல்கிறேன். புத்தருடைய வாழ்க்கையை முற்றுப் பெற்ற வாழ்க்கை என்றும், மணம் செய்து கொள்ளாத ஏசுநாதரின் வாழ்க்கையை முற்றுப் பெறாத வாழ்க்கை என்றும் பல பெரியோர்கள் கூறுகின்றனர். பிள்ளைப் பேறில்லாத தம்பதிகள் 'புத்' என்னும் நரகத்தில்

இன்னும் ஒன்று சொல்கிறேன். கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையர் என்ற புலவரும் நண்பர்கள். சோழன் வடக்கிருந்து உண்ணாநோன்பிருந்து சாக இருந்த போது பிசிராந்தையாரும், அவருடன் துணையாக இறக்க முயன்றபோது பிள்ளைப்பேறில்லாத நீங்கள் இறக்கக்கூடாது என்ற அரசன் கூறியவுடன், அவர் தன் இல்லத்திற்குச் சென்று, குழந்தை பிறக்கும் வரை இருந்துவிட்டு, குழந்தை பிறந்ததும் மீண்டும் தேடிச்சென்றார் என்று இலக்கியம் கூறுகிறது. ஆகவே, ஒருவரது வாழ்க்கை திருமணத்திற்கு பிறகே தொடங்குகிறது. குழந்தை பிறந்ததுமே முற்றுப் பெறுகிறது என்ற அடிப்படையில் அவ்வாறு அமைந்திருக்கிறது.

திருமணம் செய்து கொள்ளாதவர்களுக்கும் சிறப்பான வாழ்வு அமைகிறதே! அதற்கென்ன சொல்கிறீர்கள்?

சிறப்பான வாழ்வு அமைவது போலத் தோன்றலாம். ஆனால், ஆராய்ச்சி செய்த அறிஞர்கள்,"பிரம்மசாரிகளே அதிக விரைவில் இறக்கிறார்கள், அவர்களுக்கு அதிகமான மனநோய்களும், உடல் நோய்களும் இருக்கின்றன." என்று கண்டு பிடித்துக் கூறியிருக்கின்றனரே! அதற்கென்ன சொல்கிறாய்!

எனவே, வாழவந்த ஒரு இளைஞன், 'பருவத்தே பயிர்செய்' என்பதுபோல, காலத்தே கல்யாணம் செய்து கொண்டு வாழவேண்டும் என்பது இறைவனின் எழுதாக் கட்டளையாகும். இயற்கையின் விருப்பமும் இதுவே தான். நமது மதங்களில் வரும் கதைகளும் நிகழ்ச்சிகளும் உருவங்களும் சடங்குகளும் எல்லாமே, ஆண் பெண்ணை இணைத்தேதான் கூறப்பட்டிருக்கின்றன. கோயில் சிற்பங்களை நீ பார்த்திருக்கலாமே!

நீங்கள் சொல்வது எனக்குப்புரிகிறது மாமா, ஆனால் நீங்கள் என் நிலைமையையும் மனதையும் புரிந்து கொள்ளவில்லையே? அதுதான் எனக்கு சங்கடமாக

புரியும்படி சொன்னால்தானே, என்னாலும் மேற்கொண்டு ஏதாவது யோசித்துப் பதில் சொல்ல முடியும். மனதிற்குள்ளே வைத்து மருகிக் கொண்டால், புதிரானது விடுபட்டுப் போகின்ற மார்க்கம் எப்படி கிடைக்கும்?

திருமணத்தைப் பற்றியும், பெண்களைப்பற்றியும், அவர்களோடு வாழ்வது பற்றியும் பயங்கரமான புதிர்களை என் நண்பர்கள் அவிழ்த்து விட்டிருக்கிறார்களே! அந்த சந்தேகங்கள் எல்லாவற்றையும் நீங்கள் நீக்கினால்தானே என்னாலும் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். மேற்கொண்டு என்னாலும் யோசிக்க முடியும் என்றான் வாசு.

என்னால் முடிந்தவரை உன் சந்தேகங்களைப் போக்க முயற்சிக்கிறேன். என் வாழ்க்கையில் பெற்ற அனுபவம், பிறர் வாயிலாகக் கேட்ட அனுபவம், என் வாழ்க்கையில் பல புத்தகங்களைப் படித்துப்பெற்ற என் அறிவு எல்லாம் உன் சந்தேகங்களைத் தீர்க்கக் கூடியனவாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லாது போனாலும், உனக்குத் திருப்தி ஏற்படுகின்ற வகையில் திறமையாக தெளிவாக விளக்க முடியும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. என்ன என்று நீ சொல்லேன் கேட்கலாம் என்று உலகநாதர் ஒரு புன்சிரிப்புடன் பிரச்சினையை ஆரம்பித்து வைத்தார்.

நானும் எத்தனையோ பேர்களைக் கேட்டிருக்கிறேன். அவர்களிடமிருந்து சரியான விவரமும் விளக்கமும் எனக்கு கிடைக்கவேயில்லை. அவர்களால் மேலும் எனக்குக் குழப்பமும் கவலையும் அதிகமானதே தவிர, குறையவேயில்லை, அதனால் தான் நான் இந்த நிலையில் இருக்கிறேன்.

உன்னுடைய நோக்கம் சரிதான். குறிக்கோளும் முறையானது தான். ரசம்போலன கண்ணாடியில் உன் முகத்தைப் பார்த்துவிட்டு, விகாரமாயிருக்கிறது என்று நீயே உன் முகத்தை வெறுத்துக்கொண்டால் எப்படி? வாழ்க்கையில் தோற்றவர்களிடம் போய், உன் வினாக்களைத் தொடுத்திருக்கிறாய். அவர்கள் வாரிவழங்கி விட்டார்கள். அதுதான் உன் குழப்பத்திற்குக் காரணம். அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விட்டாய்.

முதலில் உன்கேள்வியைத் தொடங்கு! என்று கேட்பது போல வாசுவைப் பார்த்து நிமிர்ந்து உட்கார்ந்தார் உலகநாதர். அவர்கள் பேச்சு, களை கட்டிக்கொண்ட்து.

திருமணம் என்பது எதற்காக? வாசு தன்முதற் கேள்வியைக் கேட்டதும், உலநாதர் தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசத் தொடங்கினார்.

அண்ணா! சாப்பாடு ஆறுகிறது! சீக்கிரம் சாப்பிட வாருங்கள் என்று வாசுவின் அம்மா வீட்டிற்குள் இருந்தவாறே குரல் கொடுத்தாள்.

'சாதத்தைச் சுடச்சுட சாப்பிட்டு விட்டு, மீந்ததை அப்புறம் தொடரலாமே' என்று கூறிவிட்டு வாசுவின் பதிலுக்குக் காத்திராமல் உலகநாதர் எழுந்தார். கிடைத்தற்கரிய விளக்கம் இப்பொழுது கிடைக்கப் போகிறது என்று மகிழும்போது, சாப்பாடு வந்து கெடுத்ததே என்று சங்கடப்பட்டாலும், நல்லகுருவை நயந்து பின்பற்றுகிற மாணவன் போல, தாய்மாமனைப் பின் தொடர்ந்தான் வாசு.

விரல்கள் சாதத்தைப் பிசைந்து கொண்டிருந்தாலும், அவனது மனம் திருமணம் ஏன்? ஏன்? என்று வினாவுடன் அலைந்து கொண்டிருந்தது. நினைவுகள் அசைபோட்டுக் கொண்டிருந்தன. உலகநாதர் நம்பிக்கையுடன் அவனைப் பார்த்து சிரித்த வண்ணம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

# 2. திருமணம் என்றால் என்ன?

மேல்மாடிக்கு வந்த இருவரும், பாய்விரித்துப் போட்டு உட்கார்ந்து கொண்டனர். மேலே முழு நிலவு காய்ந்து கொண்டிருந்தது. உலகநாதர் உண்ட அவகாசத்தைவிட எடுத்துக் கொண்ட ஓய்வு நேரம், கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. வாசுவுக்கோ நிமிடம் யுகமாகக் கழிந்து கொண்டிருந்தது.

ஏன் திருமணம் என்று கேட்டாயே, இப்பொழுது சொல்லட்டுமா என்று சிரித்துக் கொண்டே ஆரம்பித்தார் உலகநாதர்.

ஒரு ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்து, ஓர் ஒப்பற்ற வாழ்க்கை வாழவேண்டும் என்ற குறிக்கோளுடன் ஈடுபடுகின்ற நல்ல நோக்கத்தின் அமைப்பே திருமணமாகும்.

எல்லா மதங்களும் இதையே தான் விரும்புகின்றன, போதிக்கின்றன. ஆணும் பெண்ணும் சேர்ந்து, ஒரு புதிய பொலிவான சமுதாயத்தை சமைக்கும் பணியில் ஈடுபடவேண்டும், பாடுபடவேண்டும் என்றே அறிவுறுத்துகின்றன.

திருமணத்தால் என்ன பயன் என்று கேட்கலாம். இருவரும் ஒருவருக்கொருவர், தன்னையே முழுமையாக ஒவ்வொருவரிடமும் ஒப்புவித்துக்கொண்டு, இருமனமும் ஒரு

தன் மலர் போன்ற உடலை, மகிழ்வினை விரும்புகின்ற உள்ளத்தை, ஒப்பற்ற இன்பத்தை, இனம்புரியாத எதிர்காலத்தை, ஏற்றமிகு வாழ்வான அத்தனையையுமே மற்றவரிடம் தந்து, தைரியமாக ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழத் துடிக்கின்ற இரு உள்ளங்களின் இணைப்பே திருமணமாகும்.

முன்பின் தெரியாத ஒரு புதிய ஆணிடம் அல்லது புதிய பெண்ணிடம் தன்னையே ஒப்படைக்கக் கூடிய தைரியம் மட்டும் அங்கு இருக்கவில்லை. தான் இந்த உலகிலே வாழ்கின்ற இறுதிக்காலம் வரை, சேர்ந்து ஐக்கியமாக வாழவேண்டும் என்று வாழத் துடிக்கும் நம்பிக்கையின் பெருந்துணிவின் வைபோகமே திருமணம் ஆகும்.

இதற்கு ஒரு தைரியம், துணிவு வேண்டுமா? புதிராக இருக்கிறதே கேட்பதற்கு?

ஆமாம்! திருமணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் ஒன்றாக, பெருந்தன்மையான துணிவுடன் வாழ்வின் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டு, எதையும் இணைந்தே முனைந்தே அனுபவிக்க விரும்பும் ஓர் இனிய கனவின் இயல்பான நினைவின் இதமான முன்னோடியாகும்.

எதிர்காலமானது அவர்களுக்கு இன்னலைத் தரலாம். எதிர்பாராத திருப்பங்களை எந்த நேரத்திலும் தரலாம். வேண்டாவெறுப்பாக விருப்பங்களை கட்டாயமாக நிறைவேற்றிவிடலாம். இன்பத்தை வாரி இறைக்கலாம். அவர்கள் ஆசையை, நோக்கத்தை மேற்கொள்கின்ற முயற்சிகளை எல்லாவற்றையும் தோற்கடிக்கலாம். அப்படி ஆயிரம் துன்பங்கள் நேரும் என்று தெரிந்தாலும், அயர்ந்து போகாமல், சோர்ந்து விடாமல், துடித்துப் போய்விடாமல்

தோற்றுப்போவோமோ என்று பயந்துவிடாமல், நன்றாக வாழவேண்டும் என்று ஒரே நம்பிக்கையில், புதிய துணையுடன் சேருகின்ற நிலையைத்தான் திருமணம் என்கிறோம்.

இந்த நினைவும் நம்பிக்கையும் எப்படி ஒருவருக்கு ஏற்படுகிறது? எனக்கு புரியாத புதிராகத்தான் இருக்கிறது என்றான் வாசு.

இதுதான் மனித சுபாவம். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தமக்குள்ளேயே திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றனர். ஊராரோ உற்றரோ, உறவினரோ பெற்றோரோ, அவர்களை வற்புறுத்துவது இல்லை. அவர்கள் உள்ளத்தில் எழுகின்ற உள்ளுணர்வின் ஊக்க எழுச்சியானது, ஒவ்வொரு நினைவிலும் இப்படி ஊடாடிக் கொண்டுதான் இருக்கின்றன.

திருமண உணர்வு ஒருவருக்கு இல்லையென்றால்? வாசுவின் கேள்வி திடீரென்று வந்தது.

அவருக்கு எங்கேயோ ஒரு குறை! இனந்தெரியாத ஒரு கோளாறு என்றுதான் பொருள். பாடாத தேனீ, பசிக்காத நல்லவயிறு பார்தததுண்டோ, என்று பாரதிதாசன் பாடியிருக்கிறாரே! வயிறு என்று ஒன்று இருந்தால் பசி என்று ஒன்று வரவேண்டும். பசியே இல்லையென்றால் வயிற்றில் கோளாறு என்றுதானே அர்த்தம். வயிறு பசிப்பது போலத்தான், உள்ளத்தின் உணர்வுகளும் பசியுடன் கிளம்புகின்றன.

உடல் உணர்வுகளுக்காகத்தானே திருமணம் என்று நீங்கள் கூறுகின்றீர்கள்?

அப்படி இல்லை. திருமணத்தில் உடல் உணர்வு ஒரு பகுதி தான். ஒரு மனிதன் தன் உடலால், உணர்வால்,

மனத்தால் சமுதாயத்துடன் இணைந்து வாழ்வது போலத்தான் திருமணத்திலும் வாழ்கின்றான்.

இரண்டு உள்ளங்களுக்கிடையே எழுகின்ற அன்பு உணர்ச்சி, இரக்கத்தின் எழுச்சி, துன்பங்கள் வந்தால் ஈடுகொடுத்துச் சமாளிக்கும் பொறுமையுணர்ச்சி, எதையும் இன்பமாக ஏற்றுக்கொள்ளும் பெருந்தன்மை, தன் உள்ளம் கவர்ந்தவரின் செயல்களை மெய்யென்றே போற்றி வாழும் நம்பிக்கை எல்லாமே திருமணத்தின் மூலமே நிறையக் கிடைக்கின்றன. நிறைவு பெறுகின்றன.

இந்த நம்பிக்கை இங்கே எப்படி நிறைவேறுகிறது?

இருவரும் இதயத்தால் ஐக்கியமாகலாம் என்ற ஒரு நம்பிக்கை நிறைந்த தைரியத்தில் தாமே திருமணம் அதாவது, தாங்கள் காட்டும் அன்பு மேலேயே ஒரு பூரண நம்பிக்கை வைத்துதான், தங்களது வருங்காலத்தை நிர்ணயித்து, அதனூடே ஆனந்தமான நிம்மதி பெறும்போதுதான், அவர்களது நம்பிக்கை நிறைவேறுகிறது.

அத்துடன், அந்த இருவரும், தங்களின் சக்தியால், புதியதொரு சமுதாயத்தைத் தோற்றுவிக்கவும், செழுமையான சமூகப் பாங்கையும் உண்டாக்கும் ஒரு ஆக்க பூர்வமான முயற்சியிலும் தானே அவர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்கிறார்கள்! ஆகவே, அந்த அரிய நம்பீக்கை அவர்களது காதலிலும் கருணையிலும் கலந்தே அமைகின்றது.

இந்த நம்பிக்கை எனக்கு ஏற்படுவதற்குமுன், இன்னும் சில சந்தேகங்களைக் கேட்டு விடுகிறேனே என்றான் வாசு. உலகநாதர் சிரித்துக் கொண்டே தலையசைத்தார். வாசு நீ ஆரம்பிக்குமுன், நான் ஒன்று முன்னுரையாகக் கூறி விடுகிறேன் என்றும் ஆரம்பித்தார்.

ஒவ்வொரு மனித உயிரும் பிறந்தது முதல் இறக்கும் வரை உணவாலும், பருவ உணர்வாலும் ஆளப்படுகிறது. 'பால்உணர்வு' என்பதை (Sex) யாரும் தனியாகத் தேடிப் போய் கண்டுபிடிக்க வேண்டும் என்பது அவசியமே இல்லை.

இந்தப் பால் உணர்வு ஆறு மாதக் குழந்தையிலிருந்தே தொடங்கிவிடுகிறது என்றும், இறக்கும் வரை அது எழுச்சி பெற்றே மனித உயிர்களை ஆசை காட்டுகிறது. ஆட்டுவிக்கிறது என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆகவே, இயற்கையாகவே நமக்குள்ளே பிறந்து இலங்குகின்ற அந்த இனிய உணர்வினால் தான், உறவினால் தான் புதிய மனித இனமே படைக்கப்படுகின்றது என்பதை நீ முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த இனிய உணர்வுதான் மனித இனத்திற்கு இதமளிக்கிறது. சுகம் கொடுக்கிறது. சொர்க்கத்தைக் காட்டுகிறது.

காதல் தான் மனித இனத்திற்கு முக்கியமான உணர்வு என்பது தானே உங்கள் கருத்து?

காதல் என்பது அன்பாகும். காதல் உணர்வு என்பது அடிப்படையான தேவையாகும். அதனை, வயிற்றுக்கு உணவு என்றும், தவிக்கும் வாய் தாகத்திற்குக் கிடைக்கும் தண்ணீர் என்றும் நாம் உதாரணம் காட்டலாம். இந்த உணர்வின் சிறப்பைப்பற்றிக் கூறும்போது, மனித இனம் அஸ்தமித்துப் போகாமல் பெருகி வாழ இயற்கை போடுகின்ற அஸ்திவாரம் என்று நீ உணரவேண்டும். இந்த அன்பின் மிகுதியே காதல் என்றும் நம்மால் பெரிதும் போற்றப்படுகிறது.

காதல் உறவு என்பது...

காதல் என்பது மனநிலை. காதல் உறவென்பது உடல் செயல் நிலை. அது முற்றிலும் உடல் உறவு தொடர்புள்ளதாகும். காதலை அளக்கவோ, புரிந்துகொள்ளவோ முடியாது. ஆனால், காதல் உறவை சோதனை செய்யலாம். புரிந்து கொள்ளலாம். குறைத்துக் கொள்ளலாம். குறித்தும் கொள்ளலாம்.

இந்த காதல் உறவு நமக்குத் தேவைதானா?

நிச்சயமாக, திருமணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் கணவன் மனைவி என்று ஒன்றாகிவிடுவதால் மட்டும் முடிந்து போய்விடுவதல்ல. ஒருவரை ஒருவர் மனதால் ரசிப்பதுடன் மட்டும் நிறைவு பெற்றுப் போய்விடுவதல்ல! காதல் என்பது, கணவனும் மனைவியும் தமது அன்பின் ஆழத்தை வெளிப்படுத்திக்காட்டும் ஓர் அரிய அற்புதச் சுகநிலையாகும். அளவிட முடியாத ஆனந்த விளக்கமுமாகும்.

அன்பு இல்லாமல் காதல் இல்லை. காதல் இல்லாமல் காதல் உணர்வு இல்லை. காதல் உணர்வு இல்லாமல் உடல் உறவு இல்லை அந்த உறவு இல்லாமல் அன்பு இல்லை என்று வண்டி சக்கரம் போல் சுற்றிச் சுழன்று சுழன்று வருவதுதான் மணவாழ்க்கையாகும்.

ஆகவே, பால் உணர்வு என்பது மனித இனத்தைப் புதுப்பிக்கவும், மனித இனத்தைப் பிறப்பிக்கவும், மணமக்கள் தங்கள் ஆழ்ந்த அன்பினை ஆனந்த செயலாக வெளிப்படுத்திக் காட்டவும் கூடிய ஒரு விலைமதிக்க முடியாத சாதனமாகும்.

இந்த உடல் உறவு என்பது மனித வாழ்க்கையில் நூற்றுக்குப் பத்து சதவிகிதம் தான். மீதியெல்லாம்

தங்களது அன்பை வெளிப்படுத்தவே தேவைப்படுகிறது என்பது அரிய உண்மை என்றே உடலியல் அறிஞர்கள் நிதமும் உரைக்கின்றனர்.

காதல் உறவின் உடல்உணர்வு என்பது, உடலில் உள்ள சுரப்பிகளிலிருந்து ஏற்படுகின்ற அதிசயமான ஹார்மோன்களினால் உசுப்பப்படுவதால் விளையும் தேவையாகும் என்பதையும் நீ உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு எழுப்பப்படுகின்ற உணர்வுகளால், உணர்வுப் பசியால் தேடிய உடல் உறவைப் பெற்று. அந்தச் சுக உறவு உணர்வு முடிந்து அவிந்தவுடன், தான் பெறுகிற திருப்தியோடு ஆனந்தமடைந்து கொள்வது மட்டுமல்ல. தனது பங்குதாரராக இருந்து தனக்கு உதவியவரை சிறிதும் நன்றியுணர்வோ அன்போ இல்லாமல் உடனே மறந்து விடவும். ஒதுங்கிக் கொள்ளவும், பிரிந்து போகக் கூடிய மனநிலையயும் அளிப்பது இந்த உடல் உறவு உணர்வு என்பதையும் நீ அறிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே, மனித வாழ்வுக்கு உடல் உறவு தேவைதான்' அது, தனது ஏதோ ஒருவித உடல்நிலை வெளிப்பாட்டுக்காகவும், மனத் திருப்திக்காகவும் தான் உதவுகிறது என்பதை மட்டும் அறிந்து கொண்டால், உனக்கு உடல் உறவு பற்றிய உண்மை நிலை புரியும்.

அப்படியென்றால், காதல் உணர்வும், பால் உணர்வும் நிச்சயம் எல்லோருக்கும் வேண்டும் என்கிறீர்களா?

ஆமாம்! காதல் உணர்வும், பால் உணர்வும் நல்லதைவிட நயம் நிறைந்தது. உண்மையைவிட வலிமையானது. மதிப்பு மிக்கப் பொருட்களை விட கவர்ச்சி உடையது.

எனவேதான், இந்த அடிப்படையான உணர்வைக் காக்கவும், அத்தியாவசிய உறவுக்காகவும், அருமையும் பெருமையும் நிறைந்த வாழ்வுக்காகவுமே வாழ்க்கையில் திருமணம் நடைபெறுகிறது. நடத்தப்பெறுகிறது.

திருமணம் ஏன் என்று புரிகிறது. ஆனால் என் சந்தேகத்தைத்தான் இன்னும் கேட்கவில்லை என்ற பீடிகையுடன் உலகநாதரின் முகத்தைப் பார்த்தான் வாசு.

உலகநாதர் அவன் கேள்விக்குப் பதில் தருவதற்குத் தயாராக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

'முதலில் பெண்ணைப் புரிந்து கொள்ள வேண்டும்! அது தான் எனக்கு கவலையாயிருக்கிறது' என்றான் வாசு.

பெண்ணையா? புன்சிரிப்புடன் கேட்டார் உலகநாதர்.

இந்தப் பாலைக் குடி! பிறகு சொல்கிறேன் என்றார். தன் பக்கத்தில் வைக்கப்பட்ட பால் டம்ளரை எடுத்துக் குடித்தான் வாசு.

பிறகு அவர் முகத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

உலகநாதர் நிம்மதியாக சுவைத்துப் பாலை பருகிக் கொண்டிருந்தார்.

# 3. பெண்ணென்றால் புரியவில்லையே?

திருமணம் செய்து கொள்வது எதற்காக என்று புரிந்து கொண்டேன். அந்தத் திருமணத்தில் முக்கியப் பங்கேற்கும் பெண்ணைப் பற்றித்தானே எனக்குப் புரியவில்லை என்ற ஒரு பெரிய கேள்வியை மீண்டும் கேட்டான் வாசு.

'பெண்ணையே புரியாமலா, ஒரு பெண்ணுக்கு மகனாய்ப் பிறந்திருக்கிறாய் என்று கேலி செய்தார் உலகநாதர்.

'தாய்க்கு;மகனாக இருப்பது வேறு தாரத்திற்குக் கணவனாக இருப்பது வேறு!

புரிகிறது வாசு புரிகிறது! நீ கேட்கப் போகும் கேள்விகளையெல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாய் கேட்டால், எனக்குத்தொகுத்துச் சொல்ல முடியாது. கேட்கும் உனக்கும் புரியாது. முன்போல் மீளாத குழப்பத்தையும் உண்டாக்கி கொள்வாய். அதனால் பகுதி பகுதியாகப் பிரித்து தருகிறேன். அப்பொழுது கேள்வி கேட்க எளிதாக இருக்கும் அல்லவா!

பகுதியாக என்றால்?

மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி என்பதில் தானே சண்டையும் சச்சரவும், சங்கடமும் சகல துன்பங்களும் உண்டாகின்றன என்று கூறினாய். அது தானே உன் வாதமும். அப்படி ஒரு கணவன், மகிழ்ச்சியான முறையில் வாழவேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் என்பதைத்தான் நான்கு பகுதிகளாகப் பிரித்து உனக்கு சொல்கிறேன் என்றேன்!.

சொல்லுங்கள்! அதற்குப் பிறகு அதன் வழியிலே நானும் ஏன் கேள்விகளை கேட்கிறேன்.!

மனைவியுடன் ஒருவன் வாழ முற்படும்பொழுது, நான்கு முறைகளில் மனைவியை திருப்தி செய்ய வேண்டும். அதாவது உடலால், மனதால், பணத்தால், அந்தஸ்த்தால், என்பதாக!

இப்பொழுது, மனைவியை உடலால் திருப்தி செய்வது என்பது எப்படி என்ற பகுதியில் மட்டும் உனக்கேற்படும் சந்தேகங்களைக் கேள். முடிந்தவரை விரசமில்லாமல் விளக்கிச் சொல்கிறேன்.

பெண்களுக்குத்தான் அதிகக் காமவெறி இருக்கிறது என்கிறார்கள். அது உண்மை தானா? வாசுவின் கேள்வி அம்புபோல வெளிப்பட்டது.

இது ஒவ்வொருவரின் உடலமைப்பைப் பொறுத்து அமைவதாகும். ஆணின் காதல் வேகத்தை, சுவற்றிலே மோதி உடனே திரும்பி எதிரே வருகின்ற பந்துக்கும், பெண்ணின் காதல் வேகத்தை, சேற்றிலே எறிந்த பந்து அங்கேயே அழுந்திவிடுவது போன்று இருக்கும் என்ற அமைப்புக்கும் ஒப்பிடுவார்கள் பெரியோர்கள்.

திடீரென்று தொடங்கி, ஒரு சுற்றுச் சுற்று, அடித்து,

புயற்காற்றுபோல, ஆணின் காதல் உணர்வால் தோன்றும் உடல் உறவு வெறியானது பீறிட்டு கிளம்பி அடங்கிவிடுகிறது.

பெண்ணுக்கோ அப்படி அல்ல. பெண்ணின் காதல் உணர்வுகள் மெதுவாக விழித்தெழுந்து, நின்று, நிதானமாகக் கிளம்பி, நீண்டவழி புறப்பட்டு, நொடிக்கு நொடி பெரிதாகி, இறுதியில் ஒரு உச்சக்கட்ட நிலையை அடையும். ஆகவே, அந்த உணர்வு உச்சக்கட்டம் அடையும் வரை ஆண் காத்திராவிட்டால் அவள் ஏமாற்றப்படுவாள்.

அவளது உணர்வு இவ்வாறு ஏமாற்றப்படுகின்ற பொழுது, சில சமயங்களில் வெறித்தனமாகத் தானே கிளம்பும். அவளை முழு அளவில் உடலால் திருப்திபடுத்தும் வரை, தன் வீரியத்தைக் கட்டுபடுத்த முடியாத ஆணினத்தில் சிலர், காமவெறி பிடித்தவள் என்ற ஓர் அவப் பெயரைச் சூட்டி விட்டிருக்கின்றார்கள். அவ்வளவுதான்.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் பெண்ணின் உடலில், வலிமை மிகுந்த, காதல் உணர்வினை எழுப்பும் மூன்று ஹார்மோன்கள் அலை அலையாகத் தோன்றி, இரத்த ஓட்டத்தில் கலந்து, உறவு உணர்வினை அளவுடன் சமநிலையிலே வைத்துக் காத்து வருகின்றன என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இது பெண்ணுடலில் இயற்கையாக அமைந்து தன்மையாக இருக்கிறது.

சினிமாக்கள், கவர்ச்சிகரமான விளம்பரங்கள், மற்றும் நேர்முகமாகக் காணும் காதல் காட்சிகள், மற்றும் புத்தகங்கள் மூலமாகவும் இந்த உணர்வுகள் விழித்துக் கொண்டு, பெண்ணின் நினைவுகளை, கற்பனைகளுடன், வெளியேற்றி விடுவதும் உண்டு.

அதனால்தான், பெண்களை அதிகக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கவேண்டும் என்று அக்காலத்திலே, மிகமிக எச்சரிக்கையுடன், பொன்னைக்காப்பது போல, வீட்டிற்குள்ளே வைத்துப் பாதுகாத்தனர்.

இந்தக் காதல் உணர்வுகள் எல்லாம், திருமணத்தின் மூலமாக மட்டுமே தீர்த்துக்கொள்ளப்படவேண்டும், என்று தான் கட்டுபாடான சமூக சூழ்நிலையை அமைத்து, அக்கால மக்கள் வாழ்ந்தனர். வாழ்ந்து காட்டினர்.

இந்த சமூக நிலையையும், கட்டுப்பாட்டையும் மீறி உடல் உறவு கொள்ளுகின்ற பெண்களைத்தான், கற்பிழந்தவர்கள், வழுக்கி விழுந்தவர்கள். காமாந்தகாரிகள் என்று அழைத்தனர். பழித்தனர். வெறுத்தனர்.

என்னதான் அன்பாக இருந்தாலும், பாசத்துடன் வாழ்ந்தாலும், மனைவி தன்னை ஏமாற்றி, மற்றவனை விரும்புவாள் என்று என் நண்பர்கள் அடிக்கடி கூறியிருக்கின்றார்கள்! நீங்கள் அதற்கென்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்?

பெண்கள் மேல் வெறுப்பு கொண்டவர்கள் பாடியிருக்கும் பாட்டும் உண்டு. அதுபோன்ற நிலைமையினை கொடுமையினை அனுபவித்த ஆண்களும் உண்டு. பெண்கள் ஒழுக்கம் கெடுகின்றார்கள், தரம் மாறிப் போகின்றார்கள் என்றால், அதற்கும் ஒரு காரணம் இருக்கத்தான் இருக்கும், காரணத்தைப் புரிந்துகொண்டால், காரியம் நடக்காமல் நாமும் காப்பாற்ற முடியுமே!

ஒரு சில பெண்கள் ஒழுக்கம் கெடுகின்றார்களே? அது ஏன் என்று உங்களால் கூறமுடியுமா?

நம் முன்னோர்கள், ஒழுக்கம் தவறுதற்குரிய காரணங்களை எல்லாம் தொகுத்துத் தந்திருக்கின்றார்கள். அவர்கள் கூறிச் சென்றதையே உனக்கும் அப்படியே தொகுத்துக் கூறுகிறேன். எந்தத் தவறுக்கும் சந்தர்ப்ப சூழ்நிலையே தான் காரணமாகும். அதை மனதில் வைத்துக்கொள். நான் கூறப்போகும் காரணங்கள் எல்லாம் சந்தர்ப்பங்களால் ஏற்படுவனவேயாகும்.

காதல் உறவிலே அதிக சக்தியில்லாமல், தொய்ந்து போகின்றவன் ஒருவனின் மனைவி; தினம் உறவு இன்பத்தை அதிகம் எதிர்பார்த்து, கணவனிடம் வீரிய சக்தி இல்லாமல் போகின்றதால் எரிச்சல் கொண்ட பெண்; மற்ற எந்த விதமான தகுதியும் இல்லாமல், மனைவியே சதம் என்று பின்னால் அலைந்து கொண்டிருக்கும் சோம்பேறியின் மனைவி; கனியே, பொன்னே, மணியே என்று கொஞ்சுவான் கணவன் என்று கருதி வந்து, குடும்பம் ஏற்று மனைவியான ஒருத்தி, தன் கணவனால் வெறுக்கப்படுகின்ற, உதைக்கப்படுகின்ற நிலையில் தன் ஆத்ம திருப்திக்காக, உடல் திருப்திக்காக மற்றொருவனை நாடி மாறிவிடுவதும் உண்டு.

கணவன் தன்னை வெறுக்கிறான் என்றும், கணவன் தன்னை மதிக்கவில்லை என்றும் உணர்ந்து கொண்ட பெண்ணும்; மற்ற பெண்களிடம் தன் கணவன் உடல் உறவு கொண்டிருக்கிறான் என்று அறிந்து கொண்ட பெண்ணும், தன் கணவனைப் பழிவாங்குவதற்காகவே தவறு செய்ய முற்பட்டு சில சமயங்களில் ஒழுக்கம் கெட்டு விடுகின்றாள்.

கணவனிடமிருந்து நீண்ட நாட்களாகப் பிரிந்திருக்கும் பெண்ணும்; தன் வயதுக்கு இணையில்லாத, வயோதிகனை மணந்து கொண்ட பெண்ணும்; கண்ணுக்கு கவர்ச்சியில்லாத

கணவனை அடைந்திருக்கின்ற பெண்ணும்; தன் கணவனால் இனி குழந்தையே கிடைக்காது என்று உறுதியாகத் தெரிந்து கொண்ட பெண்ணும்; நிச்சயம் குழந்தை தனக்கு வேண்டும் என்று தீராத ஏக்கம் கொண்டவளும்; உடலுறவை ஒரு பொழுதுபோக்காக எண்ணும் சொகுசுக்காரியும் ஒழுக்கம் தவறிப்போக வாய்ப்பிருக்கிறது என்பதும் முன்னோர்கள் கண்டறிந்த உண்மைகளாகும். அதைத்தான் இப்படி சுருக்கமாக உனக்குக் கூறுகிறேன்.

அப்படியென்றால் ஒரு பெண்ணை எளிதில் வயப்படுத்தவும், காதலிக்கவும் முடியும் என்கிறீர்களா?...

எல்லோரையும் என்று பொதுவாக சொல்லிவிட முடியாது. அது தவறான எண்ணம். அதற்கேற்ற நிலையில் இருப்பவர்களைத் தானே இழுக்க முடியும்!.

மழைபொழிகிறது. சங்குகள் கடல் நீர் மேல் வந்து வாய்பிளந்து கிடக்கின்றன. வாய்ப்பு கிடைக்கின்ற சங்கில் மட்டும்தானே மழைத்துளி விழுகின்றது. முத்தாகின்றது.

சந்தர்ப்பம் அமைந்தால் தான் பெண் சம்மதம் தெரிவிப்பாள். எந்தெந்த வாழ்க்கை நிலையில் உள்ளவர்கள் காதலுக்கு எளிதில் வயப்படுவார்கள் என்பதனையும் கூறி வைத்த நம்மவர்களின் அபிப்ராயத்தைக் கூறுகிறேன். அவசரப்படாமல் தெளிவாகத் தெரிந்துகொள்.

“இளமையிலேயே விதவையாகிவிட்டவள்; ஏழையாக பிறந்தாலும் எப்படியாவது பணக்கார வாழ்க்கையை இன்பமாக, உல்லாசமாக அனுபவித்து விடவேண்டும் என்று தற்பெருமை கொண்டு திரிபவள்; கணவனை எட்டிக்காயாக வெறுப்பவள்; கணவனால் நிர்த்தாட்சண்யமாகக்

குழந்தையையும் சாகக் கொடுத்துச் சஞ்சலப்பட்டு, மீண்டும் ஒரு குழந்தையை மிகவும் வேண்டிவிரும்பி இருப்பவள்; தவிப்பவள்.

கணவனிடம் உடல் உறவு கொள்வதை கடனே என்று தலையில் அடித்துக்கொண்டு சம்மதமில்லாமல் சம்மதிப்பவள்; அதையே வெறுப்பவள்; தவறில்லாமல் நடக்கும் பொழுதே, சந்தேகப்படுகின்ற கணவனால் அடிக்கடி தண்டிக்கப்படுகின்றவள்; நெடுந்தூரம் பயணம் சென்று களைப்புடன் இருப்பவள்; வீட்டில் வேறு யாரும் இல்லாது, தனியே தனித்து வாழ்கின்றவள்; வயது வந்த மைத்துனர்களுடன் ஒரே வீட்டில் வசிக்கின்றவள்; கணவனை மதிக்காது, விரும்பாது தன் தாய் வீட்டிலே எப்பொழுதும் வாழ்பவள்; சந்தேகப்படுகின்ற கணவனிடம் சிக்கிக் கொண்டவள். கணவன்மேல் சந்தேகப்பட்டுக் கொண்டு, வீணே அலட்டிக் கொண்டு, 'நானும் அது போல் செய்கிறேன் பார்' என்று சவால்விட்டு வாழ்பவள்; இளம் வயதிலேயே தன் கற்பைஇழந்தவள்; இயற்கையிலேயே அன்புக்கு நெஞ்சம் நெகிழும் தன்மையுடையவள்;

கை, கால் போன்ற உறுப்புக்களில் அங்கஹீனம் உள்ளவனின் மனைவி; வாய் நாற்றமும் உடல் துர்நாற்றமும் உள்ளவனின் மனைவி; முரட்டுத்தனமாகவும், முட்டாள் தனமாகவும் நடந்துகொள்கிறவனின் மனைவி; சதாகாலமும் நோயாளியாக வாழ்கின்றவனின் மனைவி;

இவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு காரணம் கருதி தங்களைத் தாங்களே தத்தம்செய்துகொண்டு, யாரையாவது தாங்கள் விரும்பியவர்களுடன் உடலுறவு கொள்ளத் தயாராகும்மனோநிலையில் இருக்கின்றார்கள் என்று பழங்கால மனோதத்துவ நூல்கள் விரிந்துரைக்கின்றன. அவர்கள்

எவ்வளவு தெளிவாகத் தொகுத்து சொல்லியிருக்கிறார்கள் பார்த்தாயா!

யாரோ ஒருவர் என்றீர்கள்! ஒரு பெண்ணின் மனதைக் கவருவதற்கு ஏதாவது தகுதி வேண்டாமா? ஒரு பெண்ணின் நட்பைப் பெறுவதற்கு ஏதாவது பெருமை வேண்டாமா? எத்தகைய ஆண்களைப் பெண்கள் விரும்புகின்றார்கள் என்பதை எனக்கு விளக்கமாகக் கூறமுடியுமா?

நிச்சயமாகக் கூறுமுடியும். அதையும் நம் முன்னோர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆண் என்றாலே ஆண்மையானவன் என்று தானே அர்த்தம். அத்தகைய ஆண்மையுள்ள ஆண் இனத்தில் சிறந்தவன் என்று மனம் விரும்பினால் தானே, ஒரு பெண்ணின் மனம் லயிக்க முடியும்.!

நல்ல வீரம் நிறைந்தவன்; நயம்பட பேசத் தெரிந்தவன்; நங்கையரிடம் நாசூக்காக நடந்து கொள்ளத் தெரிந்தவன்; நங்கையர்விருப்பத்தைத் தெரிந்து கொண்டு, அதனை பூர்த்தி செய்ய முயன்று, அதிலும் வெற்றி பெறுகிறவன்; வீர தீர சாகசச் செயல்களை அநாயாசமாகச் செய்து முடிப்பவன்; நல்ல இளமையும் உடற்கட்டும் நிறைந்தவன்; தான் வசிக்கும் பகுதியிலே நிறைந்த செல்வாக்கு உடையவன்; செல்வ வசதி அதிகம் உள்ளவன்; ஒரு பெண்ணுடல் இளமையிலிருந்தே பழகி வருபவள்; பெண்ணின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்கிறவன்;

இத்தகைய அருங்குணங்களில் ஏதாவது ஒரு அம்சத்தில், அருஞ்செயல்களில் ஏதாவது, ஒன்றில் சிறந்த ஆண்களைப் பெண்கள் பெரிதும் விரும்புவார்கள்.

மேற்கூறிய தகுதியுடைய ஆண்மகனை பெண்கள் விரும்புகின்றனர் என்றே வைத்துக்கொள்வோம். அவனும் காதலிக்க விரும்புகிறான் என்றால், அதற்கும் ஏதாவது கட்டுப்பாடு இருக்கிறதா?

நிச்சயமாக இருக்கிறதே! ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் உடலுறவு கொள்ள விரும்புகிறான் என்றால், அவன் யார் யாரிடம் உடல் உறவு வைத்துக் கொள்ளலாம் என்ற கட்டுப்பாட்டையும் அக்காலத்தில் எச்சரிக்கை செய்து வைத்திருந்தார்களே!

"தன் தரத்தைவிட தாழ்ந்திருக்கும் பெண்; பூப்படையாத பெண்; அங்கஹீனம் உள்ள பெண், துறவியாக வாழுகின்ற பெண்; அறிவு குழம்பி, பைத்தியமாக வாழுகின்ற பெண்; தேகத்தில் துர்நாற்றம் அடிக்கின்ற பெண்; தன்னைவிட வயதில் மூத்த பெண்; அடுத்தவனின் மனைவி"

மேற் கூறியவர்களுடன் எக்காரணத்தை முன்னிட்டும் உடலுறவு வைத்துக்கொள்ளக் கூடாது என்று பெரியோர்கள் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றனர். தடுத்திருக்கின்றனர், மீறியவர்களை தண்டித்தும் இருக்கின்றனர்.

அதனால்தான், பொருத்தம் பார்த்து திருமணம் வைக்கிறார்களோ!

ஆமாம்! நமது முன்னோர்கள் மிகவும் திறமையானவர்கள், அவர்கள் ஒரு ஆணையும் பெண்ணையும் நன்கு ஆராய்ந்து, உடலமைப்பினைப் பார்த்து தெரிந்து கொண்டுதான், பொருத்தம் பார்த்திருக்கின்றார்கள். அதையே இப்பொழுது ஜாதகமாக்கிப் பார்க்கிறார்கள்.

ஆண்களின் உடலமைப்பைக் கொண்டு அவர்களை மூன்று பிரிவாகவும், பெண்களின் உடலைமைப்பை ஆராய்ந்து மூன்று பிரிவாகவும் பிரித்தனர். அதனைக் கொஞ்சம் விளக்கமாகக் கூறுகிறேன்.

முயல் இனம், காளை இனம், குதிரை இனம் என்று ஆணையும், மானினம், பெண் குதிரை இனம், யானை இனம் என்று பெண்ணையும் பிரித்தனர்.

இப்படி எதனால் பிரிக்க முடிந்தது? இதனால் என்ன லாபம் உண்டு?

திருமணம் என்பது, சுகமான வாழ்க்கையை, சுலபமாகப் பெறக்கூடிய சாதனம் என்பது உனக்கு நன்றாகத் தெரியும். அந்த உள் உணர்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது உடல் உறவுதான் என்பது உனக்கு நன்றாகப் புரியும்.

திருமணம் ஆகின்ற ஆண்பெண் இருவருக்கும் உடல் பொருத்தம் பூரணமாக அமைந்திருந்தால், மனப்பொருத்தமும் தானாகவே வந்துவிடும் என்பது உளநூல் வல்லுநர்களின் கருத்தாகும், அதனால்தான் பிரித்துக் கூறினார்கள்.

இவ்வாறு பிரித்துக் கொண்டால் எப்படி பொருத்தமாகக் கொள்ள முடியும்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?

உடலை வைத்துத்தான் உள்ளம் என்பது உலக வழக்கு. நல்ல உடல் இருந்தால் நல்ல மனம் இருக்கும் என்பது போல. உடலால் ஒருவர் திருப்தியடைந்தால் தான், மனதாலும் திருப்தியடைந்து மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வயிற்றுப் பசியானது, உணவை உட்கொண்டதும் அடங்கிப் போய் விடுகிறது. அதைத் தொடர்ந்து ஒருவித நிம்மதியும் திருப்தியும் உண்டாவதை நாம் உணர்கிறோம். அதுபோலவே, உடலில் இயற்கையாக எழுந்து, உடல் முழுவதும் பரவி நிற்கின்ற உடல் உணர்வுப் பசியடங்கும். அப்பொழுதுதான் திருப்தி ஏற்படும். உலக வாழ்க்கையே

உவப்பாக இருக்கும். பசியினைப் போக்கியவரை ரசிக்கவும் தோன்றும். வணங்கவும் தூண்டும்.

உறவில் திருப்தி என்பதை இன்னும் கொஞ்சம் விளக்கமாக சொல்ல முடியுமானால் நன்றாக இருக்கும்?

சொல்கிறேன். முயல் இன ஆண்மகனும் மான் இனப் பெண்ணும்

காளை இன ஆண்மகனும், குதிரை இன பெண்ணும்.

குதிரை இன ஆண்மகனும், பெண்யானை இனப் பெண்ணும், திருமணம் செய்துகொண்டு, உடல் உறவு முறையில் ஈடுபட்டால், சாதாரண இன்பமும், ஓரளவு திருப்தியுமே இருவருக்கும் கிடைக்கும் என்பது பெரியோர்கள் முடிவு.

பூரண திருப்திபெற வேண்டுமானால்?

குதிரை இன ஆண் மகனை மானினப் பெண் மகளும் சேர்ந்து பெறுகின்ற உடல் உறவில்தான் பூரண இன்பம் நிலவும். அதற்கு மாறாக, முயலின் ஆண்மகனும் பெண் குதிரை இனப் பெண்ணும் சேர்ந்தால், அது உடல் உறவாக இருக்காது. ஏதோ ஒன்று போல, இன்பத்தை இருவருமே பெறமுடியாத நிலையில் தான் அது முடியும் என்றும் திருத்தமுறக் கூறிச் சென்றிருக்கிறார்கள்.

முன் கூறியவற்றை தொகுத்துப் பார்த்துக்கொண்டால் உண்மை நிலை புரியும் என்பதால்தான், நான் அதிகம் விளக்காமற் மேலே செல்லுகிறேன்.

பெண் திருப்தியடையாவிட்டால்?

ஆண், தன் உணர்வுகள் உந்தி எழுந்திட, விந்து கழிந்த உடனேயே, ஒரு ஆத்மதிருப்தியை அடைந்துவிடுகிறான். ஆனால் பெண்நிலை அப்படியல்ல. பெண்ணுக்குரிய உணர்வுகள் பெரிதும் புயல் போன்றவை.

ஏமாற்றத்தால், தான் நினைத்ததைச் செய்துவிடவும் தயங்க மாட்டாள் என்றே சாத்திரங்கள் கூறுகின்றன.

அதெப்படி அவ்வளவு திட்டவட்டமாகக் கூறுகின்றீர்கள்?

ருசியான உணவு, பகட்டான உடை, உல்லாசமான வாழ்க்கை, ஊரார் புகழ்வதற்குகேற்ற பங்களா, கார்போன்ற பலவிதமான வசதிகளைச் செய்து தருகின்ற தன் கணவனை மதிக்காமல், மரியாதை தராமல் அலட்சியமாக நடத்துகின்ற பெண்களை நீ சமூகத்தில் சந்தித்திருப்பாய் என்று நினைக்கிறேன்.

இத்தனை வசதிகளையும் தந்துவிட்டு, மனைவிக்கு அடங்கி ஒடுங்கிப் போகின்ற நன்கு படித்த பணக்கார, வசதியுள்ள ஆண்களையும் நீ பார்த்திருப்பாய்!

'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை' என்று ஓர் இலக்கிய வரி உண்டு. அதற்குரிய பொருளையும் சொல்லுகிறேன். கண்ணாடி முன்னால் நின்று கொண்டு, நாம் எப்படி கையையும் காலையும் தூக்கி உயர்த்துகிறோமோ, அது போலவே கண்ணாடியில் தெரிகின்ற நிழற்பிம்பமும் அசையும். செய்து காட்டும்.

அதுபோலவே, மனைவியின் பேச்சுக்கு மறுபேச்சில்லாமல் மனைவிக்கு அடங்கி ஒடுங்கிப் போகின்ற கணவன்மார்களின், முக்கால் வாசிப்பேர், மனைவியை உடல் உறவில் முழுமையாகத் திருப்திபடுத்த இயலாததால் தான் இப்படி இருக்கின்றனர் என்று உடல் உறவு முறை பற்றி விளக்குகின்ற நூல்கள் கூறுகின்றன.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். நல்லஉணவோ, அழகான சேலையோ, நாவுக்கு ருசியான சுவையான பொருட்களையோ, வாங்கித் தராத, உடற்கட்டு மிகுந்த ஓர் ஏழைக் கணவனிடம், அவனது மனைவி அடங்கி

ஒடுங்கி, அவன் சொல்கின்ற வார்த்தைக்கு மறு வார்த்தை பேசாமல், பூனைபோல் கணவனுடன் குழைந்து செல்வதையும் நீயும் பார்த்திருப்பாய்!

அவன் முரட்டுத்தனமாக அடிப்பான் என்பதற்காகப் பயந்துகொண்டு,அவனுடன் அப்படி வாழலாம் இல்லையா?

அதுதான் தவறு. ஒருவரை அடிப்பதனால் மட்டுமே அடங்கி ஒடுங்கி விடமுடியாது. உடல் திருப்தியால் எழுகின்ற உணர்வுகள், அந்த சக்தியும் திறமையும் படைத்த கணவன் முன்னே அவளை சரணகதியடைய வைத்துவிடுகிறது. திருப்தியடையாத பெண்ணின் உணர்வுகள் திமுறிக்கொண்டு, எழுந்து திணறிக்கொண்டு துள்ளிவிழுவதானது, திறமையில்லாத கணவனை சாடவைக்கிறது. அவனை சதிராட வைக்கிறது. அதனால் ஒரு நிம்மதியை நிறைவேறாத உணர்வுகள் நிறைவாகப் பெற்று மறைமுகமாகக்களிக்கின்றன. சுகம் காணுகின்றன. அதுவே உண்மையான ரகசியமாகும்.

இந்த உடல் உறவைப்பற்றி பூடகமாகச் சொன்னால் எப்படி புரியும் எனக்கு?

நாளை காலையில் சொல்லுகிறேன் என்று நழுவினார் உலகநாதர்.

விடியுமட்டும் காத்திருக்கவேண்டுமே என்று முனகியவாறு எழுந்தான் வாசு. நட்சத்திரங்கள் கண்ணை சிமிட்டி மின்னின. நிலவும் மறைந்து மறைந்து அவனைப் பார்த்து சிரித்தது. எதையும் காணா விழியனாகி, தன் படுக்கையை நோக்கி விரைந்தான் என்றாலும், அவனது எண்ணங்கள் எதைஎதையோ சிந்தித்து அசைபோட்டுக்கொண்டிருந்தன.

# 4. உறவும் நிறைவும்

உடல் உறவில் திருப்தி ஏற்பட்டால் தானே, உறவுக்குரியவனிடம் உண்மையான அன்பும் பிறக்கும் என்கிறீர்கள்! என்று ஆற்றை நோக்கி காலையில் நடந்து கொண்டிருக்கும்போது, வாசு கேட்டான்.

ஆமாம் என்று ஆரம்பித்தார் உலகநாதர். இந்த உண்மையான அன்பு தான் உலகத்தை ஆள்கிறது. உலக மக்களை ஒருங்கிணைத்து வழிநடத்திச் செல்கின்றது.

தனக்கு பிரியமானவரை அல்லது அன்புக்குரியவனை பார்த்த உடனேயே, அந்த அன்பும் இன்பமும் உள்ளத்தில் பீறிட்டுக் கொப்பளிக்கின்றது. அவர்கள் சேர்ந்து இருக்கும் வரை, இன்ப நினைவுகள் மனதிலே கூடுகட்டிக்கொண்டு உற்சாக ஊஞ்சலாடி மகிழ்கின்றன. இனிக்கும் போதையில் நர்த்தனமாடுகின்றன.

எந்தப் பொருளைப் பார்த்தாலும், அதிலிருந்து தோன்றும் தொடர்பான எண்ணங்கள் எல்லாம், தனக்குப் பிரியமானவரைச் சுற்றிச் சுற்றியே வட்டமிடும். வண்டாகப்பாடும். பிரியும்போது தடுமாறும், நடைமாறும்.

இத்தகைய மகிழ்ச்சி எண்ணங்கள் முகிழ்க்க, நித்திரையும் நெருங்கி வராதவண்ணம் நிலைமாறும்,

நித்திரைக் குறையக் குறைய பசியும் குறையும். தாகம் மறையும். தேகம் மெலியும். செயல்களும் தடுமாறும். தன் அன்புக்குரியவருக்காக, தன் உயிரையே அர்ப்பணித்துக் கொள்கின்ற உறுதிவாய்ந்த உள்ளத்தை உருவாக்குகின்ற சக்தியையே இந்த அன்பு கொடுத்து விடுகிறது என்றால், இந்த அன்புக்கு எவ்வளவு சக்தியிருக்கிறது பாத்தாயா? என்று அன்பு விமரிசனம் செய்தார் உலகநாதர்.

'புதிதாக மணமான தம்பதிகளுக்கு இத்தகைய உண்மையான அன்பு வேண்டும்' என்றும் சொல்லிக் கொண்டே நடந்தார்.

புதிதாக மணமான தம்பதிகளுள் சிலர், கணவனிடமிருந்து விடுபட்டு, பொங்கலில் விடுகின்ற மஞ்சு விரட்டுக்காளைபோல தன்தாய் வீட்டுக்கே ஓடிப் போய் விடுகின்றார்களே, அவ்வாறு பெண்கள் ஓடிப்போய்விடக் காரணம் அன்புஇல்லாததனால் தானே?

அதற்கும் ஒருசில காரணங்கள் இருக்கத்தான் இருக்கின்றன. புதுஇடம், புதுஉறவு, புதுசூழ்நிலை என்று பெண்ணுக்கு ஏற்படுகிறபொழுது, ஒரு பெண்ணுக்கு அச்சமும், எப்படியிருப்பார்களோ கணவனது பெற்றோர்கள்? எவ்விதம் தன்னை ஏற்றுக்கொள்வார்களோ? என்ற பயமும் அவளை ஆட்டிப் படைக்கும். இதனால் தான் மனைவியை 'அஞ்சிவரும் உரிமை' என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

கணவனைப் பற்றியும், கணவனது வீட்டாரைப் பற்றியும், மற்றவர்கள் கண்டகண்டவிதமாகக் கூறியனவற்றைக் காதில் வாங்கிக்கொண்டு, அவற்றைக் கற்பனை செய்து பார்த்துக்கொண்டு, திகிலுடனும் மருண்டும் திருமணப் பெண் கணவன் வீடுவருவதும் இயல்புதான்.

அப்பொழுது, கணவனும் வீட்டாரும் அந்தப் பெண்ணிடம் இதமாகவும், பதமாகவும் நடந்துகொள்ள

வேண்டும். அதற்குமாறாக பெண்ணை விரட்டிப்பிடித்து வேலை வாங்கியும், கோபப்படுவது போல் பேசியும் சாடியும் மணமகன் வீட்டார் நடந்து கொள்ள முயன்றாலும், கணவன் அவளை ஆதரவுடன் நடத்தவே வேண்டும்.

ஆதரவு காட்டுவதற்குப் பதிலாக, அல்லும் பகலும் அவளை உடலுறவுக்காகக் கட்டாயப்படுத்தி, முரட்டுத்தனமாக நடத்தும் ஆண் நடந்துகொள்ளும் போதும், பயந்தபெண்கள் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட முயல்கிறார்கள். இதுதான் உண்மையாகும்.

அன்பு காட்டுவதும், நம்பிக்கை ஊட்டுவதும்தான் கணவனின் முதல் காரியமாக இருக்க வேண்டும். அப்படித்தானே!

ஆமாம்! திருமணம் நடந்து முடிந்த உடனேயே உடலுறவுக்காகத் துடிப்பது இயற்கை. அது இளமையின் தூண்டுகோல். உடல் சக்தியின் வேண்டுகோள். அதனைக் கட்டுப்படுத்திக் கொண்டு போகும் பொழுதுதான், காலங்காலமாக இருவரும் நிம்மதியாக வாழ்வதற்கு வகை ஏற்படும்.

கரைபுரண்டு வரும் காட்டாற்றைத் தேக்கிவிட்டால், எப்படியெல்லாம் அந்த நீர் பயன்படுமோ, அதுபோலவே, பொங்கிவரும் உடலுறவு வெறியை கொஞ்சம் சாந்தப்படுத்தி, சரிசெய்து கொண்டுவிட்டால், பிறகு அதுவே பேரின்பம் தரும் கற்பக விருட்சமாகிவிடும்.

சரிசெய்துகொண்டு வாழ்வதுதான் தன்மையாகும்.

அப்படியானால், முதல் இரவுக்கு அவசரப்படக் கூடாது என்கிறீர்களா?

நான் கூறவந்தது அந்த அர்த்தத்தில் இல்லை. முதல் இரவுக்குத் தம்பதிகள் ஆர்வம் காட்டவில்லை

யென்றாலும் அவர்களது பெற்றோர்கள் சுற்றத்தார் அவசரப் படுத்திவிடுவார்கள். அவ்வாறு வருகின்ற வாய்ப்பை பொறுமையாக மணமகன் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான் எனது கொள்கை.

முதன்முதலாக திருமணத் தம்பதிகள் உடலுறவு கொள்வதைத்தான் முதலிரவு என்கிறோம். முதலிரவைப் பற்றி ஒரு அறிஞர் கூறுகின்றார் "உடலுறவின் மூலம் கன்னி ஒருத்தியைப் பெண்ணாக்கி விடும் அற்புதமான இரவே முதலிரவாகும்." என்கிறார். அந்த அற்புதத்தை நிகழ்த்தும் போது அவசரப் பட்டால்!...ஆக்கம் பொறுத்தவர்கள் கொஞ்சம் ஆறவும் பொறுக்கவேண்டும்! அதிலும் புதிதாக உறவு கொள்ள முயல்பவர்கள் எவ்வளவு நிதானம் காட்டவேண்டும் தெரியுமா?

திருமணத்திற்கு முன்னே, உடலுறவில் பழக்கம் உள்ளவர்களாக இருந்தால் அப்பொழுது நீங்கள் கூறுவது?

புதியவர்களுக்குத்தான் அந்த முதலிரவு புனிதமான நாள். இல்லையேல் அது வெறும் சம்பிரதாய நாள்தான். ஏற்கனவே உடலுறவில் வேண்டிய அனுபவம் உள்ளவர்கள். திருமணம் செய்து கொள்வது வெறும் சம்பிரதாயத்திற்காக இருக்கலாம். அல்லது வருமானம் சுலபமாக அனுபவிப்பதற்காக இருக்கலாம். அல்லது வருமானம் கருதியும் இருக்கலாம். பிறந்த அல்லது பிறக்கின்ற குழந்தைகள் நேரான வழியில் பிறந்தவை தான் என்று ஊருக்கும் உலகத்திற்கும் உணர்த்தும் நோக்கத்துடன் திருமணம் செய்துகொண்டதாகவும் இருக்கலாம்.

ஆனால் புதுமை மணம் வீசும் முதலிரவில்தான் ஓர் புத்துணர்ச்சி இருக்கும். அதில் மனச்சிலிர்ப்பு (Thrill) இருக்கும்.

புதிய தம்பதிகளுக்கு உங்களது யோசனை என்ன என்று கூறுங்களேன்!

முதலிரவு என்றதும், உடலுறவுக்காக அது என்று எல்லோருமே உறுதி செய்து கொள்கின்றனர். இத்தனை ஆண்டுகளாக எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்ததையெல்லாம், அந்த ஓர் இரவுக்குள்ளேயே தெரிந்துகொண்டு விடவேண்டும், அனுபவித்து விடவேண்டும் என்று துடித்துப் போய் விடுகின்றனர். அதற்கான எல்லா முயற்சிகளையும் தீவிரமாக்கிக் கொள்கின்றனர்.

பெண்ணுக்கோ இந்த முதலிரவு ஒரு திரிசங்கு சொர்க்கம். பிறர்சொல்லக் கேட்ட கதைகள்; என்ன நடக்கப் போகிறதோ? எப்படியெல்லாம் தன்னை அலைக் கழிக்கப் போகிறாரோ? எதிர்பார்க்காதது எதுவும் நடந்து விடுமோ என்றெல்லாம் பெண்ணானவள் ஓர் இனம் புரியாத ஒருவித பெருமூச்சுடன் அந்த நேரத்தில் இருப்பதும் உண்டு. பயந்துகொண்டு துடிப்பது உண்டு.

இப்படி முன்பின் பழக்கமில்லாத, அறிமுகமில்லாத புதியவர்கள் இருவர். ஒரு தனிப்பட்ட சூழ்நிலையில் தனித்திருக்க விடப்படுகிற பொழுது, ஒருசில இனிய முறைகளை இருவரும் ஒத்துப்போய் கையாண்டால்தான், இருவருக்குமே நல்லது போகப் போக அது சுகபோகமாகவும் இருக்கும். சுகலோகமாகவும் இருக்கும்.

கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போய்விடும்? இந்த மனப்பாங்கு அந்தநேரத்தில் ஆணுக்கு வந்தால் அது மிகமிக நல்லது.

ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்? ............

முதன்முதலாக, தன் மனைவியிடம் உடலுறவு கொள்வதற்கு ஆணானவன், எந்தவித முயற்சியிலும் ஈடுபடுவது உகந்ததல்ல. அது உரிய முறையும் அல்ல.

மணமான ஒரு கன்னி, தனது தூய்மையை, இதுவரை காத்துவந்த ஒரு புனிதத்தை கற்பை, உடனே இழந்துவிட விரும்பமாட்டாள். தான் கண்ணெனக் காத்து வந்ததை கணவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று, விரும்பி வந்தாலும், அந்த மாற்றத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகவே ஊக்குவிக்க, விருந்தளிக்க, பகிர்ந்தளிக்க, பக்குவப்படுத்த வேண்டும்.

அதற்காக, அவள் மனம் அன்பினால் நெகிழுமாறு நடந்து கொள்ள வேண்டும். அந்த அன்பை முதலில் அவளிடமிருந்து பெறுவதுதான் கணவனின் முக்கிய நோக்கமாக, முதன்மையான கடமையாக இருக்க வேண்டும்.

நீங்கள் சொல்வது புதுமையாக இருக்கிறதே?

காரணமில்லாமல் நான் எதையும் சொல்லத் துணிவதில்லை வாசு. இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால், புது மணப்பெண்ணின் அவயவங்கள் அனைத்தும் பூ போன்றவை. தொட்டால் மலரும் தன்மையுள்ளவை. பெண்மை மிகுந்தவை. அவசரமும், ஆத்திரமும், அவளை அடைந்தே முடித்திடவேண்டும் என்ற ஆவேசமும் கொண்டு, அவயவங்களை வலிந்து பற்றும்பொழுது, அழுத்தி தழுவும் பொழுது, அவயவங்கள் வலியெடுக்கும். அதனால் மனதில் திகில் பிடிக்கும். அந்தப் புதுசெயலில் மனம் அசூயை அடையும். வெறுப்பு அவள் மனதில் தலைதூக்கிவிட்டால் அதில் சிறப்பு எப்படி அமையும்? முதல் கோணல் முற்றிலும் கோணல் அல்லவா?

மனைவியின் அன்பை எப்படிக் கவர்வது

ரயிலிலோ பஸ்ஸிலோ நாம் பிரயாணம் செய்வதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது பல பேர்களை, புதியவர்களை நாம் சந்திக்கிறோம். அவர்களுடன் பழகும்போது நாம் என்ன செய்கிறோம்? முதலில் நம்மை அறிமுகப்படுத்திக்கொள்கிறோம். புதியவர்களை நண்பர்களாக்கிக் கொள்ள முயற்சிக்கிறோம்.

பேச்சின் இடையிலே அவர்களின் மனம் கோணாதவாறு உரையாடுவதும், தின்பண்டங்கள் தந்து உறவு கொள்வதும் போன்று பழகுவதுபோல, தனது புதிய துணைவியிடமும் பழகி அவளின் அன்பைப் பெறவேண்டும்.

மனைவியை நட்புக்கு உரியவளாக மாற்றுகின்ற வழியில் ஆரம்பத்தில் சொல்லாடுவதும், உரையாடி மகிழ்வதும், தன்னுடன் இணக்கத்திற்கு ஏற்றவளாகப் பேசி மகிழ்விப்பதும் தான் உரையாடுதல் என்பதில் இருக்க வேண்டும். மனைவியைகிண்டலாகப் பேசித்தான் உரையாட வேண்டும் என்பது கூடவே கூடாது. பொது விஷயங்கள் பேசலாம். அல்லது, ஒருவரைப் பற்றி ஒருவர் பேசி அறிந்து, அவரவர் திறமையைப்புரிந்து, மகிழ்ந்து பாராட்டிக் கொள்ளலாம்.

இதில் முக்கியமாக ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், பெண்ணின் மனமறிந்து பேசி நட்புகொள்ள வேண்டியது என்பதுதான்.

நட்புடன் முகமலர்ந்து பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, 'தழுவுதல்' போன்ற காரியங்கள் செய்தாலும், பெண்ணுக்குரிய அச்சமும், நாணமும், மடமும், பயிர்ப்பும் அவளைத் துடிக்க வைக்கும், சில சமயங்களில் தடுத்து நிறுத்தவும் செய்யும். இதுபோன்ற நிலையில், விளக்கின் ஒளியில் இருப்பதைவிட, முகம்தெரியாத மங்கலான

செய்தல் நன்மையே பயக்கும். சரசம் எந்த நேரத்திலும், எக்காரணத்தை முன்னிட்டும் விரசமாகி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

உடலுறவு முயற்சியை மேற்கொள்வதற்கு முன், மனைவியைத் அந்த உச்ச நிலைக்குத் தயாராக்கும் பொறுப்பு கணவனையே சார்ந்ததாகும். மனைவியின் மனமொத்த ஒத்துழைப்புக்கு, அவசியம் அவளிடம் இணக்கம் பெறுவதும், இல்லையேல் இணக்கம் பெறத் தூண்டி இசைவு பெறுவதும் மிகவும் அவசியமானதாகும்.

சுவையான செய்திகளைப் பற்றிப் பேசிக்கொண்டு, அதற்கு மறுமொழி கிடைப்பது போன்ற வகையில், மனைவியை பேசவைத்தவாறே செயல்முறையில் ஈடுபடுவது, இருவருக்குமுள்ள இடைவெளியை மேலும் குறைத்து, ஒரு இனிய சூழ்நிலையை உருவாக்கும்.

எத்தனை நாளைக்கு இப்படி நடந்துகொள்ள வேண்டும்.?

மனைவியானவள், தன்னை முழுவதும் அவனிடம் தருவதற்குத் தயார் என்ற நிலை வருகின்ற வகையில் தான் இப்படி நடந்து கொள்ள வேண்டும். கிராமப்புறங்களில் மிகவும் கட்டுப்பாட்டுடன் வளர்ந்தவளாக இருந்தால் முதல் மூன்று நாட்களே போதுமானது என்பார்கள். என்றாலும் இப்பொழுது கவர்ச்சி மிக்கப் படங்கள், கதைகள், சினிமா, நாடகங்கள், பத்திரிக்கை விளம்பரங்கள் போன்றவற்றைக் கண்டறிந்து, பெண்ணும் முதலிரவே தயார் என்ற நிலைக்கு வந்து பதமானால், பக்குவமான முறையிலே உடல் உறவை மேற்கொள்ளலாம்.

எப்படி என்று விளக்கிக் கூறாமல் மேம்போக்காகக் கூறினால், என்னைப் போன்றவர்கள் எப்படி புரிந்துகொள்ள முடியும் என்றான் வாசு.

இதுபோன்ற உடலுறவு விவரங்களை அனுபவமுள்ளவர்களிடமே தான் கேட்கவேண்டும். அவர்களிலும் நற்பண்பு உள்ளவர்களாக இருந்தால்தான் உன் கேள்விக்கு நல்ல முறையில் பதில் கிடைக்கும். காமாந்தகாரராகவோ அல்லது முரட்டுத்தனமும் வெறித்தனமும் நிறைந்தவராகவோ உள்ளவர்களிடம் கேட்டு, அவர்களும் அவர்கள் பாணியிலேயே கற்றுத்தந்து விட்டால், வேறு வேதனையே தேவையில்லை. குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொள்ளும் கதைதான். ஆன்ற பெரியோர்கள் கூறிய அறிவுரையை உனக்கு அப்படியே சொல்கிறேன்.

மனைவியிடம் மேற்கூறிய முறைகளில் மனம்விட்டுப் பழகி, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்கின்ற பொழுது, மணற்பகுதியில் தோண்டிய நீரூற்று போல அன்பு பொங்கி வழியும், காதலுக்கும் அந்த உறவுக்கும் தயாரான பெண் தன் கணவனுக்கு பல செய்கைகள் மூலம் தன் அன்பை வெளிப்படுத்துவாள். இது காதலனுக்கு காதலி காட்டுகின்ற முறையிலும் பொருந்தும்.

வாசு அறிந்து கொள்கின்ற ஆவலின் உணர்ச்சி வசப்பட்டிருந்தான். அவன் ஆவலுக்கேற்றவாறு உலகநாதர் மேலும் விளக்கமாகக் கூறலானார்.

காதலனுக்கு என்றல்லவா சொன்னேன்! ஏனென்றால், கணவனும் முதன்முதலில் அறிமுகமாகின்ற காதலன்தானே! தனது எண்ணத்தை இயற்கையான உடல் இயக்கத்தின் மூலமாகத்தானே வெளிப்படுத்த முடியும்! அதனால் தான் இந்த முறை இருவருக்கும் பொருந்தும் என்றேன்.

காதலால் உந்தப்பட்ட பெண்ணின் இதழ்கள் காதலனைப் பார்த்ததும் இலேசாக நடுங்குவது போல துடிக்கும். குளத்திலே மீன் துள்ளுவது போல, கண்கள்

வட்டமிடும். ஏற்கனவே கட்டிமுடித்த கூந்தலை அல்லது உடையை கரங்கள் கோதி விடும்! அதனை அடிக்கடித் தழுவிக்கொள்ளும்; அன்புக்குரியவன் பார்வை தன் மேல் படும்பொழுது, மேலாக்கை நழுவவிடுவது போல தவறவிட்டு, மேலழகை வெளிப்படுத்திக் காட்டும்: வேலைநேரம் என்றால், தவறுதலாக நேர்வது போல. தன் துடையழகையும் வெளிப்படுத்திக் காட்டும். ஏற்கனவே இறுக்கமாகக் கட்டியுள்ள ஆடையை தளர்த்தி விட்டுக் காட்டும் பாங்கெல்லாம் அன்பை வெளிப்படுத்திக் காட்டும் குறிப்பேயாகும்.

காதலனை சாந்தமாகப் பார்ப்பதும், ரகசியமாக பார்த்து சிரிப்பதும், வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு அடிக்கடி பேச முயற்சிப்பதும், அருகிலே உள்ள குழந்தையிடம் அவர் காதில் படும் படியாக பேசுவதும் எல்லாமே தன் அன்பை வெளிப்படுத்திக் காட்டும் அற்புத சைகைகளாகும்.

அன்பைத்தான் மனைவி காட்டி விடுகிறாளே! அவளிடம் எவ்வாறு நெருங்குவது? எவ்வாறு நெருக்கம் பெறுவது? அதற்கென்று ஏதாவது விதிகள் உள்ளனவா என்றான் வாசு!

விதி என்று ஒன்று இல்லாவிட்டாலும், எதற்கும் முறை ஒன்று இருக்கிறதல்லவா! மதியைக் கொஞ்சம் பயன்படுத்தினால் வருவது நிதிதான். இல்லையேல் நல்ல கதி பெறுவது கஷ்டமே!

மனதால் நெருங்கிவிட்ட பிறகு, இனி உடலால் நெருங்கும் முறையைத்தானே கேட்கிறாய். பெண் உடலில், பருவ உணர்வுகள் எல்லா இடங்களிலும் பரவி இருந்தாலும் அந்த இன்ப உணர்வுகளை எழுச்சியுறச் செய்வதற்கென்று உடலில் ஒரு சில இடங்கள் இருக்கின்றன. அவைகளைத் தடவும்பொழுதும், தழுவும் பொழுதும், உடல்உறவுக்குரிய உணர்வு ஓங்கி எழுந்து உச்ச நிலைக்கு வந்து விடுகின்றன.

அத்தகைய இடங்களாக, உணர்வு மிகுந்த எட்டு இடங்களைப் பெரியோர்கள் குறித்திருக்கின்றார்கள். முதல் தரமான உணர்விடங்களாக உதடுகள். (உதடுகள் என்றாலே முத்தம் என்று பொருள் தருகிறது பிங்கள நிகண்டு). கொங்கைகள்; பிறப்பு உறுப்பும் அதைச் சுற்றியுள்ள உள்பகுதிகள்; மேற்கூறிய நான்கு இடங்களும் திரவங்களை உண்டுபண்ணுகின்ற **(Anal Region)** இடங்களாகும்.

மற்ற நான்கு இடங்களும் முடி, முளைத்திருக்கின்ற பகுதிகளாகும். தாழ்வாய், கன்னம், அக்குள் **(Arm Pit)** மற்றும் பிறப்புஉறுப்பின் வெளிப்பகுதிகள்.

மேற்கூறிய எட்டு இடங்களிலும், உடல் உறவு பற்றிய உணர்வுகள் நிறையாகவே நிறைந்து கிடக்கின்றன.

மேலும், உள்ளங்கைகள், உள்ளங்கால்கள், விரல்கள், விரல் நுனிகள், முன்பாத விரல்கள், முழங்கால்கள் முழங்கைப் பகுதிகள் அத்துடன் காதுபகுதிகளும், சற்று காதல் வேக உணர்வை எழுப்பும் இரண்டாந்தர பகுதிகளாகும்.

இடங்களைத் தெரிந்து கொண்டது போலவே அவைகளைப் பயன்படுத்தும் தடங்களையும், விதங்களையும் புரிந்து கொள்வது நலம்.

உதடுகளில் முத்தமிட்டும், கன்னங்களை வேதனையெழாமல் கடித்தும் கிள்ளியும்: கொங்கைகளை நசுக்குவது போல் பிசைந்தும் இன்பம்பெறச் செய்ய வேண்டும். இன்பம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறிச் சென்றிருக்கின்றனர் நமது முன்னோர்கள்.

இவ்வாறு உடலுறவு கொள்வதற்கு, ஒவ்வொரு முறை தொடங்குவதற்குமுன், வெளிப்படையாக இப்புற விளையாட்டுக்களில் ஈடுபட்டு விளையாடிவிட்டுத்தான், உள்

ஒருவர் நினைத்த உடனேயே உடல் உறவில் ஈடுபடமுடியாதா?

இது இயற்கையாக நடக்க முடியாதது. நடக்கக்கூடாதது. துன்பமில்லாத இன்பம்பெற வேண்டும் என்றால் சற்றுப் பொறுமையும் வேண்டும். நினைத்தவுடனேயே, ஆணின் பிறப்புறுப்பானது கிளர்ந்து எழுந்துவிடும். ஆனால் பெண்ணுக்குரியது அப்படி அல்ல.

முன்னே விளக்கியது போல், நினைவாலும் செயலாலும் பெண் நெகிழ்ந்து விடும் தருணத்தில், பெண்குறியினுள்ளே ஒரு வழவழப்பான திரவம் ஒன்று உதயமாகி, ஆண்குறிசெல்லும் பாதைக்கு பாய்விரித்து, நடத்திச் செல்வது போல அமைப்பினை உண்டாக்கி விடுகிறது.

அது எப்படி மாமா?

தரைமேலே நத்தை ஊர்ந்து போவதற்கு முன், ஒரு விதத் திரவத்தை ஒழுகவிட்டு, அதன் பிறகு எளிதாக இனிதாக அதன்மேல் ஊர்ந்து போவது போல, ஆண்குறி யானது தடையின்றி தாராளமாக, ஊன்றி உள்ளே நுழைந்து செல்வதற்கு ஏதுவாக, அந்தத் திரவம் பெண்குறி பாதை முழுவதும் பரவி நிற்கிறது. அதனால் ஆண், பெண் இருவருக்குமே நல்லது.

எந்த விதத்தில் இது நல்லதென்று கூறுகின்றீர்கள்?

அவ்வாறு திரவம் சுரந்து நிற்கும் போது தான், பெண்ணானவள், உடலுறவுக்குத் தகுதியாகித் தயாராக இருக்கிறாள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இல்லையேல், ஆண்குறியானது உள்புகுவதற்கு இயலாமையால் சிரமப்பட, அதன் காரணமாக வலிந்து புணரும் போது, ஆணுக்கு வேதனையும், பெண்ணுக்கு

எரிச்சலும் ஏற்படுகிறது. அதனால் இருவருமே துன்பமடைகின்றனர்.

ஆண்குறியின் முன்பாகம் சிராய்வு ஏற்பட்டு, சில சமயங்களில் புண்ணாகியும் போகும். பெண்ணாலும், அந்த எரிச்சலினால் இதமாக ஈடுகொடுக்க முடியாதவாறும் ஆகும். ஆகவே, பெண் தயாராகிவரும்வரை ஆண் புறவிளையாட்டுக்களில் ஈடுபடுத்திப் பொறுத்திருப்பது தான் சாலச் சிறந்ததாகும்.

பொறுமை இல்லையென்றால் என்ன செய்வது?

பொறுமை இல்லையென்றால், ஆண் தன் சக்தி முழுவதையும் சேர்த்து, தானே உடலுறவில் ஈடுபட, அதன் காரணமாக ஆணுக்கு விந்து விரைவில் வெளியாகிவிடும். பெண்ணுக்கு உச்சநிலை (Climax) வருவதற்குள், ஆண் செயலற்றுப் போனால், பெண்ணின் நிலை என்னவாகும்? ஏமாற்றம்தானே தொடரும்!

ஏமாற்றம் ஒரு முறை என்றால் பரவாயில்லை. பெண் பொறுத்துக்கொள்வாள். சகித்துக்கொள்வாள். தினமும் இதே கதை தொடர்ந்தால், அவளுக்கு சங்கடம் நேர்வது மட்டுமல்ல; உடலுறவில் சலிப்பும் ஏற்பட்டுவிடும்.

கணவனுடன் பேசும்போது கடுகடுப்பும், எரிச்சலுமே அந்த ஏமாறும் பெண்ணிடமிருந்து பூதமாகக் கிளம்பும். ஆகவே, உடலுறவு என்றால், பெண்ணும் திருப்தியடையும் வரை, தொடர்ந்து இருவரும் இன்ப உறவு நிலையில் இருப்பது என்பது தான் உண்மையான முறையாகும்.

ஒரு பெண் உடலுறவில் திருப்தியடைந்து விட்டாள் என்பதை எப்படி தெரிந்து கொள்ள முடியும்.?

உடலுறவு முடிந்து விடுகிறது. அதில் அவள் திருப்தியடைந்து விட்டாள் என்றால், அவள் தன் தேகத்தை

மீண்டும் கணவன் மீது வலியோடும், விசையோடும், விருப்பத்தோடும் அழுத்தி இன்பம் காண்பாள்.

அவளது கண்கள் ஆனந்தப் பூரிப்பின் மிகுதியால் துடித்தெழுந்து துவண்டு, மின் விடுவதையும் காணலாம்.

அத்துடன் ஆணுக்கு விந்து வெளியாவது போலவே பெண்ணுக்கும் வெளியாகும். அவ்வாறு அது வெளியேறியதும் கைகால்கள் விட்டுப்போவது போன்ற ஒரு உணர்வு நிறைவதும், களைப்பின் மிகுதியால் கண்களை மூடிக்கொண்டும், நெட்டிக் முறித்துக் கொண்டும் பெண் தனது திருப்தியை காட்டி விடுவதின் மூலம் நாம் கண்டு கொள்ளலாம்.

அவள் பெற்ற அந்தத் திருப்தியின் மிகுதியால் மனமிழந்து தன் வசமிழந்து, தனது துடையிரண்டையும் துணைவனது துடைகளுடன் இணைத்தும், தழுவியும் பெருமூச்சு விடுவது போன்ற ஸ்...ஸ் என்ற ஒலியெழுப்பி தனது இச்சையின் உச்சநிலையை திருப்தியை வெளிப்படுத்துவாள்.

பெண் திருப்தியடையவில்லை என்றால்?...

அதிக அச்சமும் கூச்சமும் உள்ள பெண்ணாக இருந்தால், அதைத் தன் மனதுக்குள்ளேயே வைத்து கொண்டு மருகுவாள். கணவன் பெறுகிற திருப்தியைக் கண்டு, 'அவர் இன்பமடைந்தால், அதுவே போதும்' என்ற விதத்தில் தேறுதல் அடைவாள். ஆறுதல் கொள்வாள்.

பல நாள் இதுபோலவே, உடலுறவு திருப்தியில்லாமல் முடிந்தால், சில சமயங்களில் அவள்தன்னையறியாமல் பெருமூச்சு விடுவாள். அழுவாள்.

என்ன செய்வது என்று அறியாமல் அடிக்கடி பலர் கைகளைப் பிசைந்து கொண்டும், சிலர் முறுக்கிக்கொண்டும்,

இன்னும் சிலர் கோபத்தால் கணவனை அடித்தும் கூட விடுவார்கள். என்றும், இன்னும் சிலர் 'கணவனை விந்து விரைவில் வெளியாகிவிடுகிறது. அவனால் இயலவில்லை'என்று அறிந்தும் அவன்மேல் ஏறி வலிந்து படுத்துக்கொண்டு, தன்னிச்சையாக செயல்படத் தொடங்கிவிடுவார்கள் என்றும் பழங்காலநூல்கள் கூறுகின்றன.

ஆணுக்கு அந்த **'இயலாமை'** எப்படி ஏற்படுகிறது?

ஆணுக்கு ஆண்குறியில் வலுவில்லாத தன்மை இருந்தால், நிச்சயம் தனது மனைவியை மகிழ்ச்சிப்படுத்த முடியாமல் போய்விடும்.

சிறியவயதில் 'சுயஇன்பம்' பெற்று, அதன் காரணமாக நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டவர்கள், உணர்ச்சிகரமான நிலையில் உடல் உறவில் அதிகநேரம் இருக்க முடியாது. முற்றிய நோயுள்ளவர்களால் கூட, உடலுறவில் அதிக அளவு ஈடுபாடு கொள்ள முடியாது.

நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம், ஆண்கள் தங்களுக்குள்ளேயே போட்டுக்கொண்டிருக்கிற மனப் போராட்டத்தாலும், கணக்கற்ற ஆவல்களாலும், குழப்பங்களாலுமே இந்த உணர்வும் குன்றிப் போய் இருக்கின்றனர். தன் உறுப்பும் நரம்புத் தளர்ச்சி காரணமாக வலுவிழந்து போய் தவிக்கின்றனர்.

அப்பொழுதும் உள் மனதில் காதல் உணர்வுகளும், உறவிலும் ஒருவித வலிப்பும் ஈடுபாடும் இருந்தால் தான் உள்ளத்தில் கிளர்ச்சியும், உறுப்பில் உணர்ச்சி மிகுந்த எழுச்சியும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும்.

இந்த இயலாமையைப் போக்க வழியே கிடையாதா?

இருக்கிறது. அந்த வழி அவனது மனைவியிடந்தான் .இருக்கிறது.

உடல் உறவு என்பது, ஒருவரே முயன்று, ஒருவரே இயக்கி, தனியே இன்பங்காணும் காரியமல்ல; அது சாத்தியமும் அல்ல.

கணவன் மனைவி இருவரும் கலந்து பேசி, கனிந்து கூடி உணர்ந்து பெறக்கூடிய இன்பமே தாம்பத்ய சுகமாகும். ஆகவே இரண்டு பேரும் விரும்பி ஈடுபட்டால்தான் சுவையும் இருக்கும்; சுகமும் இருக்கும்.

கணவன் வலுவிழந்து, உடலுறவில் திருப்தி தரமுடியாமற் போனால், தானும் திருப்திபெற முடியாமற் போனால் திருப்தியடையாத மனைவி, அந்த சமயத்தைப் பெரிதுபடுத்திக்கொண்டு, கணவனது இயலாமையை மிகுதிப்படுத்திக் கணவனை கேலி செய்வதும், கேவலப்படுத்துவதுபோல, கொச்சை மொழியினைக் கொட்டுவதும் கூடாது. அது தவறாகும்.

கணவனின் இயலாமைக்குரிய காரணத்தை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். கணவனின் அதிகமான குடும்பப் பொறுப்பை, உத்தியோகத்தில் உண்டாகும் சுமைகளை, சுற்றுப் புறத்தில் நிகழும் கவலைகளை அதிக உடல் உழைப்பை, தானே வலியப் போய் ஏற்றுக் கொண்டு அதனால் அதிகம் அவதிப்படுவதை மாற்றி, கணவனுக்குத் தேவையான சேவைகளை முதலில் மனைவி செய்ய வேண்டும்.

கணவனுக்கு தெம்பு ஊட்டுவதைப் போல் தைரியம் தருவது போல, தன்னம்பிக்கையை ஊட்ட வேண்டும்.

கணவனுக்குத் தான் செய்கின்ற பணிவிடையின் மூலம் மீண்டும் அவரது வலிமையை மேலும் கொண்டுவர

முயல வேண்டும். கணவனும் தன் மனைவியுடன் ஒத்துழைக்க வேண்டும். தேவையானால் மருத்துவர்களின் ஆலோசனையையும் மேற்கொள்ளலாம்.

கொஞ்சங்கொஞ்சமாக, தன்னம்பிக்கை பெருகபெருக, தேகமும் சக்தியை அடைய அடைய, விரும்பியதைப் பெறலாம். வேண்டிய அளவும் பெறலாம்.

ஏற்கனவே திருப்தியைத் தரக்கூடிய சக்தி மிகுந்த கணவனும், இருக்கிறது என்று எகத்தாளமாக இறைத்து விடாமல், சற்று உடலுறவில் சிக்கனமாக இருக்க வேண்டும். தேகத்தை வளமாகவே காத்துக்கொள்ள வேண்டும்.

எதற்கும் நேரம், காலம், நெருங்கும் சமயம் உண்டு என்பார்களே, அது போல, காலம் நேரம், சமயம் சந்தர்ப்பம் உறவுக்கும் உண்டு.

உடலுறவுக்கு கென்று தகுந்த நேரம் காலம் என்பதை எப்படி மாமா தெரிந்து கொள்ள முடியும்?

முடியும். அதற்கு வழி இருக்கிறது.

"ஒரு ஆணுக்கு அளப்பில்லாத ஆனந்தத்தை அளிப்பதற்காகவே அழகும் நளினமும் மிக்கப்பெண் படைக்கப்பட்டிருக்கிறாள்" என்று ஓர் அறிஞர் கூறுகின்றார்.

உடலுறவை விரும்பும் பெண்ணானவள் எப்படி நாசூக்காக வெளிப்படுத்துவாள் என்பதை முன்கூட்டியே உனக்குக் கூறியிருக்கிறேன். ஒரு பெண் எப்பொழுது உடலுறவை உண்மையிலேயே விரும்புவாள்? எப்பொழுது அவளுக்கு அதிகம் தேவைப்படுகிறது என்பதையும் கணவனானவன் புரிந்து கொண்டாலே போதுமல்லவா!

நெடுந்தூரம் அல்லதுபயணம் செய்து முடித்துக்களைத்திருக்கும் பொழுதும்; உடல் நலக்குறைவு

மீண்டும் நல்ல உடல் நலம் வந்திருக்கும் பொழுதும்: நாட்டியம் நடனம் போன்ற உடலுழைப்பில், கலையுழைப்பில் ஈடுபட்டதற்குப் பிறகும்; மகப்பேறு முடிந்து ஓரிருமாதங்கள் கழிந்தபோதும், பெண்கள் உடலுறவில் அதிகமாகத் தீவிரம் காட்டுவார்கள் என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

தம்பதியர் நீண்ட நாள் பிரிந்திருந்து ஒன்று சேருங்காலத்தும்; ஊடல் அல்லது சிறு சச்சரவு ஏற்பட்டு மீண்டும் தொடங்குகின்ற சமாதான நேரத்திலும்: மாதவிடாய் நாட்கள் முடிந்துவிட்ட மறுநாளிலும்: மதுபானம் போன்ற வெறியேற்றும் போதை தரும் பானங்களை அருந்தியுள்ள நேரத்திலும், பெண்கள் நிறைந்த வேகம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

உடலுறவு தேவையில்லை என்றால்? .........

உடலுறவு தேவையில்லை என்றால். ஒன்று உடல் நலக்குறைவாக இருக்க வேண்டும் அல்லது உடலுறவு வேண்டாம் என்ற மனக்கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். இல்லையென்றால், மனைவி கணவன்மீது கோபமாக இருக்கிறாள் என்ற ஏதாவது ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.

கணவன் மனைவி வெறுக்கிறாள், கோபமாக இருக்கிறாள் என்பதை எப்படி அறிந்து கொள் முடியும்?..

நேரடியாகக் கோபத்தைக் காட்டி, பேசி விட்டால், எளிதாகப் புரிந்து கொள்ளலாம். எதுவும் சொல்லாமல், கோபமாக இருக்கிறாள், கணவனை வெறுக்கிறாள் என்பதை அவள் செயல்கள் மூலமாகவே புரிந்து கொள்ள வேண்டும்.

கோபமடைந்த மனைவி, தன் கணவனை ஏறெடுத்துப் பார்க்கமாட்டாள். ஏதாவது ஒரு வேலையை வைத்துக் கொண்டு அவனிருக்கும் பக்கமே வரமாட்டாள்.

வராத சூழ்நிலையை உண்டுபண்ணிக் கொள்வாள். வந்தாலும் திரும்பிக்கூட பார்க்கமாட்டாள். அப்படி ஏதாவது கணவன் கேட்டாலும் அவள் மறுமொழி கூறாமல், மௌனமாக இருந்து விடுவாள்...

அவன் மீறி, தன் முன்னால் வந்தாலும் கணவனைப் பார்க்க எரிச்சல் பட்டுக் கொண்டு. அந்தச் சூழ்நிலையை மிகவும் வெறுப்பாள். அவனைப் பார்க்காமல் இருப்பதையே ஆனந்தமாகக் கொள்வாள். அவனுடன் எந்தக் காரியத்திலும் இணைந்து செயல்படமாட்டாள். சொன்னாலும் அதைத் தான் கேட்காதது போல, தன் காரியங்களையே செய்து கொண்டிருப்பாள்.

கணவனது நண்பர்கள் வந்தாலும் அவர்களையும் அலட்சியம் செய்து தான் வெறுக்கும் நிலையை, கணவனுக்கு கோடிட்டுக் காட்டுவாள்.

படுக்கையில் படுத்திருக்கும் பொழுது, முன்புறமாகத் திரும்பாது பின் புறத்தைக் காட்டியவாறு சுருண்டு படுத்துக் கொள்வாள். இத்தனையையும் புரிந்துக்கொண்டு, மனைவியை சாந்தப்படுத்துவது ஒரு சாகசச் கலைதான். அந்த அற்புதக்கலையை அறிந்திருக்கும் கணவனே மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழமுடியும்.

அந்த சாகசச் கலையை என்னவென்று எனக்கும் சொல்லித் தாங்களேன்?

ஊடுதல் காமத்திற்கு இன்பம். அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின் என்பதுபோல, ஆத்திரம் கொண்டு ஒதுங்கிவிடும் மனைவியிடம், மெதுவாகப் பேச்சைக் கொடுத்து, அவளுக்கு கோபம் வந்த காரணத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தன் பக்கம் தவறு இருக்கிறது என்று தெரிந்து கொண்டால், கொஞ்சமும் கௌரவம் பாராட்டாமல் தாராளமாக ஒத்துக்கொள்ள வேண்டும். அவள் செய்திருப்பது தவறு என்று தெரிந்தால், அதைப் பெரிதுப்படுத்தாமல் விட்டுவிட வேண்டும். அதாவது மன்னித்து விடுகிறோம் என்பதை அவள் உணர்ந்து கொள்ளும் பாவனையில் நாசூக்காக பேசி மாற்றி விட வேண்டும்.

அதே நேரத்தில், மனைவிக்குரிய சிறந்த குணங்களைப் பாராட்டிப் பேசவும் தயங்கக்கூடாது. முன்னரே ஏதாவது வாங்கித் தருவதாக வாக்களித்திருந்தாலும், மறந்துபோய்விட்டதாகக் கூறி, வேறு ஒரு நாளில் வாங்கித் தருகிறேன் என்பதுபோல கூறி, வசப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இன்னும் வேறு பல உபாயங்களை அதற்குரிய அத்தியாயங்களில் கூறுவேன்.

உடலுறவு முறையில் எத்தனை விதங்கள் என்று நீங்கள் கூறுவில்லையே?

பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள். பல வசதிகளுக்கேற்ப பிரித்துக்காட்டி, அறுபத்தி நான்கு (கோணங்களில்) விதமாக ஆணும் பெண்ணும் ஐக்கியமாகலாம் என்கிறார்கள். அதையெல்லாம் அனுபவபூர்வமாக, மனைவியின் ஒத்துழைப்புடன் அறிந்து கொள்ளுதல் தான் முறையாகும்.

அந்த அறுபத்திநான்கு முறைகளையும் நான்கு விதங்களில் நடத்தலாம். அதனையும், அதிலிருந்து கிளைவிடும் முறைகளையும் அவரவர் யூகத்திற்கு விட்டு விடுவோம்.

முன்னரே கூறியதுபோல, ஆண் பெண் இருவரின் உடலமைப்பை மன உணர்ச்சியைப் பொறுத்தே முறைகள் (Method) அமையும். அதற்கு முன்னே, பெண்ணின் பிறப்புறுப்பின் தன்மையையும் விதங்களையும் புரிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

கருவாய் (Vagina) என்பது தாமரை மலர்ந்திருப்பது போன்ற தன்மையில், மிகமிக மிருதுவான அமைப்புடன் விளங்குவதாகும். விரல்களை மடக்கி கட்டப்பட்டிருப்பது போல, ஒரு சிலருக்கு மிகவும் இருக்கமானதாகவும் இருக்கும். இன்னும் பலருக்கு அந்தக் கருவாய் மடிப்பும் சுருக்கமும் நிறைந்ததாகவும் இருக்கும். வேறு சிலருக்குப் பசுவின் நாக்கைப் போன்ற வடிவத்துடனும் அமைந்திருக்கும்.

ஆகவே உடல் உறவு என்பது அதனதன் அமைப்புக் கேற்பவே ஆனந்தமளிக்கும் என்பது தான் மிக முக்கியமான கருத்தாகும்.

பெண்களை பொதுவாக சந்தோஷப்படுத்துவது எப்படி?

உடலுறவு கொள்ளும்பொழுது, கணவன்மனைவி இணைந்து, ஒருவித லயிப்புடன் ஈடுபட்டு, செயல்படும் பொழுது தேவையான ஒத்துழைப்பையும் தந்து, திறம்பட அனுசரித்தால்தான், நிறைவான இன்பம் பெறமுடியும்.

அதே நேரத்தில் பெண்ணின் வயதிற்கேற்பவும் உடலுறவு கொள்வது மிகவும் நுண்ணியதாகப் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

பதினாறு வயதுக்குட்பட்டபெண்களுக்குத் திருமணம் நடக்கக் கூடாது. அப்படியும் மீறி நடந்து விட்டிருந்தால், அவர்களை உடலுறவில் அதிகமாக ஈடுபடுத்தினால் அவர்களுக்கு அதிக ஆனந்தம் கிடைக்காது. அவர்களின்

அன்பையும் நம்பிக்கையையும் முதலில் பெற்றால் தான் இன்பம் விரிவடையும்.

அவர்கள் விரும்புகின்ற பூ, பழம், சிற்றுண்டி, உணவு, வளையல், கைக்குட்டை போன்றவைகளை வாங்கி வந்து பரிசளிப்பதன் மூலம், அவர்கள் உற்சாகத்தை அதிகப்படுத்தலாம். ஆபரணங்கள் அணிந்து கொள்வதில் அவர்கள் மனம் லயித்திருந்தால், அவசியம் வாங்கித்தந்தால் பின்னும் பேரின்பம் பெருகலாம்.

உடலுறவை விட, பேசும் விதத்திலும், பழகும் முறைகளிலும் அன்பை விரிவாக்கிக்கொண்டு, சீரான முறையில் இதமாக, பதமாக உடலுறவு கொள்ள வேண்டும்.

பதினாறு வயதிலிருந்து முப்பத்தி ஐந்து வரையில் உள்ள பெண்களிடம், அன்புடன் பழகி, ஆதரவைப் பெற்று, கொஞ்சங் கொஞ்சமாக உடலுறவு முறைகளில் அதிகமாக ஈடுபாடு கொள்ளச் செய்துவிட வேண்டும்.

பழகிக் கொண்டபிறகு, அதில் பற்றுக்கொண்ட பிறகு, உடலுறவில் அதிக வலிமையுடன் (Force) செய்வதையே அவர்கள் அதிகம் விரும்புவார்கள். நல்ல அனுபவம், நிறைந்த வயது, உணர்ந்ததை அனுபவிக்க விரும்பும் உடலமைப்பு, வேகமாக ஈடுபடவும் கூடிய வாய்ப்பு இருப்பதால், உண்மையிலேயே வாழ்வை அனுபவிக்கும் பருவமாக இந்த வயதுப்பெண்கள் இருக்கிறார்கள்.

ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு பழகிய பிறகு, உடலுறவில் நல்ல பழக்கம் ஏற்பட்ட பிறகு, பற்றும் அதில் கொண்டுவிட்ட பிறகு, உடலுறவில் அதிக வலிமையுடன் செய்தால், அது அவர்களை அதிகம் மகிழ்விக்கும். இது போன்ற ஆழ்ந்த உறவில், ஆணுக்கு

ஊன்றுகோல் தேவைப்படும். அதற்கேற்ற பிடிப்பு பெண்ணிடம் தானே உள்ளது.

உடலுறவு காலத்தில், பெண்ணின் தோள்கள், கழுத்து, கொங்கைகள், புட்டங்கள் இன்னும் துடைகள் அல்லது முதுகுப்புறம் போன்ற ஏதாவது ஒன்றை கெட்டியாகப் பிடித்தவண்ணம் செயல்படுவது இதமாக இருக்கும்.

முப்பத்து ஐந்து வயதுக்கு மேற்பட்டு ஐம்பது வயது வரை நடுத்தர வயது பெண்கள் என்று முன்னோர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். இவர்களிடம் உடலுறவு அதிக அளவில் நடத்த அவசியம் இருக்காது என்றும் அபிப்ராயப்படுகின்றனர். இந்த வயதுப் பெண்களுக்கு, ஆழ்ந்த அன்பும் உணர்ச்சிப்பூர்வமான உறவும், கணவரது அன்புகரமான உடையாடலுமே தேவைப்படுகிறது.

அந்தப்பெண்கள் விரும்புகிற நேரத்தில், அவர்கள் விரும்புகின்றவண்ணம் இணைந்து உடலுறவில் ஒத்துழைக்கும் ஆண்கள், ஏற்ற இன்பப் பரிசைப் பெற்றுக் கொள்கின்றனர். அனுபவம் முதிர்ந்த உடல், மனம், அல்லவா! அங்கே அனுபவம் பேசுகிறது. அவ்வளவுதான்.

அடுத்து வயோதிகப் பருவம். இதற்கு மேல் பெண்களுக்கு உடலுறவு வேண்டுமா வேண்டாமா என்பது அவரவர் உடல் நிலையைப் பொறுத்தாகும். ஒரு மேல்நாட்டறிஞர், தன்மாமியாரைப் பார்த்து, ஒரு கேள்வியை கேட்டாராம். பெண்களுக்கு ஆண்கள் மேல் உள்ள ஆசையும் அன்பும், உடல் உறவில் உள்ள ஈடுபாடும் எப்பொழுது மாறும் மறையும் என்று தான் கேட்டாராம்.

என்னைப் போய் கேட்கிறீங்களே! என்னைவிட வயது ஆனவர்களைப் பார்த்துக் கேட்டால் ஒரு வேளை

உங்களுக்குப் பதில் கிடைக்கும் என்று அந்த அம்மையார் பதில் கூறினாராம். அப்பொழுது அம்மையாருக்கு வயது 99.

ஆகவே, உடல்நலம் நிறைவாக இருக்கின்ற வரை, உடல் உறவில் நாட்டமும், நனிசால் ஊட்டமும் இருக்கும்.

உடல் உறவு தினந்தோறும் கொள்வது நல்லதா? உங்கள்அபிப்ராயம் என்னவென்று கூறுங்கள்.

'மாதத்துக்கு இருவிசை மாதரைப் புணர்தல்' என்றும் பழம் பாடல் ஒன்று கூறுகின்றது. மாதத்தில் இருமுறை இரு தடவை என்று அந்த கவிஞனும் பாடாமல். இருவிசை என்று பாடியிருக்கிறார். விசை என்றால் வேகம், வலிமை என்று பொருள்படும்.

ஆணும் பெண்ணும் விசையோடும் நசை(விருப்பம்) யோடும் மாதத்திற்கு இருமுறை புணர்ந்துவிட்டால், அந்த இன்பம் நாளெல்லாம் தொடரும். நெஞ்சத்தில் படரும். உடல் நலமும் கெடாதவாறு, வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கேற்ற வேலைகளை சுறுசுறுப்பாக செய்யவும், நிம்மதியாக உறங்கவும் கூடும். அத்துடன் விந்து நீற்றுப் போகாமல் இருப்பதால் உடல் உறவில் உண்மையாக ஈடுபட முடியும்.

இக்காலத்தில் சினிமா, நாடகம், பத்திரிகை பற்றிய விளம்பரங்களில், பேச்சுக்களில் நடைமுறைகளில் எல்லாம் இன உறவு பற்றி, இன உணர்வை எழுப்பும் தன்மையே அதிகம் இருப்பதால், இரவில் அந்தக் கிளர்ச்சியும் எழுச்சியும் நிமிர்ந்து நிற்பது இயல்பே!

மனக்கட்டுப்பாடுள்ளவர்கள் அந்த மாயா சக்தியிலிருந்து தப்பித்துக்கொண்டுவிட முடியும். உடல் இச்சைக்கு அடிமையாகி விடுவபவர்கள் உண்ணுவதும்,

உறங்குவதும் ஒரு நாளைக்கு எப்படி முக்கியமோ, அது போல உடலுறவும் முக்கியம் என்று வாழ்கின்றனர். இன்னும் ஒரு சிலர், ஒரு நாளைக்கு இருமுறை என்றவாறும் வாழ்கின்றனர்.

ஒரு சொட்டு விந்தின் துளியானது, 72 சொட்டு இரத்தத்தால் உருவாக்கப்படுகிறது என்பர் விஞ்ஞானிகள். ஒரு முறை விந்து வெளியாகும்பொழுது, ஒரு தேக்கரண்டியளவு வெளியேறுகிறது. அதற்கு எவ்வளவு ரத்தம் தேவைப்படுகிறது என்பதைக் கணக்கிட்டால், உண்மை புரியும். அத்துடன் அந்த உயிர்ச்சத்தான விந்தினை வெளியேற்ற உடலை முறுக்கி, இயக்கி, சூடேற்றுத்தானே காரியம் ஆற்ற வேண்டியிருக்கிறது!

ஒரு துணியை அடிக்கடி உடுத்தி, அடித்து முறுக்கி, கசக்கி பிழிந்து கொண்டே இருந்தால் துணி என்ன ஆகும்? சீக்கிரம் நூலிழைகள் நைந்து போக, துணி கிழிந்து போகாதோ?

அதுபோலவே, உடல் என்பது திசுக்களாலும், நரம்புகளாலும் ஆனது தானே! நரம்புகளும், திசுக்களும் நாளுக்கு நாள் முறுக்கப்பட்டு, கசக்கப்பட்டால் என்ன ஆகும்? நலிந்து போகாதா?

எவ்வளவு தான் ஊட்டம் கொடுத்தாலும் இழந்து போன உயிர்சக்தியை (விந்து) மீட்க முடியுமோ?

நோயென்று நாம் படுத்து விட்டால், நொந்து போன உடல் மேலும் நோவது மட்டுமல்லாமல், மீண்டும் முன்போன்ற நிலைமை வருமா? முன்னிருந்த உடல் வலிவும் முகப் பொலிவும் வராது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.

கையிலே பணம் இருக்கிறது என்பதற்காக, கண்டபடி இறைத்து விடுவதா? பானையில் சோறு இருக்கின்றது

என்பதற்காக நினைத்தபொழுதெல்லாம் நாம் சாப்பிட்டு விடுவதில்லை. அப்படியே அளவுக்கு மீறி சாப்பிட்டால் வயிறு என்னவாகும்? அஜீரணம் மட்டுமல்ல, அதையடுத்து எத்தனை எத்தனை நோய்கள் தொடரும்? தொந்தரவு செய்யும்? துன்பத்தைக் கொடுக்கும்?

அதுபோலவே, உடலுறவு கொள்வதற்காக துணைவி இருக்கிறாள் என்பதற்காக, நினைத்த நேரமெல்லாம் நடைபெற்றாக வேண்டும் என்பது இருவருக்குமே நல்லது அல்ல. அது அறிவுடைமையும் ஆகாது.

அழுக்குத் தீர குளித்தவர்கள் இல்லை, ஆசைதீர உடலுறவில் திளைத்தவர்களும் இல்லை என்பது பழமொழிதான். ஆகவே, உடலுக்குத் தேவையான பொழுதுதான் உடலுறவு வேண்டுமே தவிர, உள்ளம் தூண்டும் பொழுதெல்லாம் ஈடுபடலாம் என்பது அல்ல.

ஏன் உள்ளம் தூண்டுகிறது என்கிறீர்கள்?

உள்ளம் என்பது எப்பொழுதும் இளமையாக இருக்கக்கூடியது. அது ஆவி போன்றது. தேகம் என்பது வலிமை இழந்து, முதுமை அடையக் கூடியது. காலம் நம்மை நாளாக நாளாக மாற்றி மெதுவாக முதுமையாக்கும். அதை விட்டு விட்டு, நாமே விரைவாக முதுமையைத் தேடி ஓடி, நம்மை நாமே கிழடுகளாக மாற்றிக்கொண்டு, கையாலாகாதவர்களாக மாற்றிக் கொள்கின்ற செயலை எப்படி மன்னிக்க முடியும்? அதனால்தான் இளமையான மனம் தூண்டுவதற்கேற்ப உடல் இயங்கக் கூடாது என்கிறோம் அதையேதான். நம்மவர்கள் மனக்கட்டுப்பாடு, சுயக்கட்டுப்பாடு (selfcontrol) என்கின்றனர்.

அக்காலத்தில் மாதத்திற்கு இருமுறை என்றனர் ஆனால் நம் காலத்தில் அந்த கொள்கை நடைமுறைக்குக்

கொண்டு வர சிறிது கடினம் என்று நினைத்தால் இப்படி நடந்து கொள்ளலாம்.

வாரத்திற்கு ஒருமுறை என்பது **கரும்பு**, வாரத்திற்கு இருமுறை என்பது **வரம்பு** தினம்தினம் என்பது **குறும்பு**.

குறும்பு நலிவுக்குக்கொண்டு ஆளை நசுக்கியே விடும் என்பதால், ஆண் பெண் இருவரும் அறிவுள்ளோராக நடந்து கொள்வதே நல்லது.

அந்தக் குறும்பால் என்ன ஆகும் என்பதையும் கூறினால் தானே அதன் அபாயமும் எனக்கு விளங்கும்!

உடலுறவு அதிகமாக ஆக, உடலில் களைப்பும் இளைப்பும் அதிகமாகும். அதனால் நரம்புக் தளர்ச்சி ஏற்படும். அன்றாட செயல்களில் ஈடுபட அதிக நாட்டம் இல்லாமல் அசந்து போகும். அசதி நிறையும்.

அசதி அதிகம் உள்ள உடம்பில் ஆர்வம் இருக்காது. ஆர்வம் குறையக்குறைய, முன்னேற்றம் தடைபடும். வருவாய் குறையத் தொடங்கும். நாளுக்கு நாள் கவலைதோன்றத் தொடங்கும். பிறகு 'ஆண்குறி' எழாமையால் இயலாமையும் ஏற்பட்டு விடும். இயலாமை ஆணுக்கு வந்துவிட்டால் அது கணவன் மனைவி உறவில் பெரும் பிளவினை உண்டாக்கிவிடும்.

ஒன்றே ஒன்றை இறுதியாகச் சொல்கிறேன். கரும்பு இனிக்கிற தென்றால் வேரோடு பிடுங்கி தின்னக் கூடாது. அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு. இது உடலுறவுக்கு மட்டுமல்ல. பெண்ணோடு சேர்ந்து வாழ்வதற்கும் பொருந்தும் என்று உலகநாதர் கூறிமுடித்தார்.

# 5. மகிழ்ச்சியுடன் வாழும் ரகசியம்!

பகல் முழுவதும் வாசுவின் எண்ணத்தில், உலநாதர் கருத்துக்கள் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன. சில சமயங்களில் தன்னையே அவன் இழந்து கொண்டிருப்பது போல ஒரு நினைப்பு. தவிப்பு.

இன்னும் எத்தனையோ சந்தேகங்கள் கேட்க வேண்டியிருக்கிறதே. இன்று மாலை ஊருக்குப் போவதாக வேறு சொல்லியிருக்கிறாரே. என்ன செய்யலாம் என்றும் குழப்பத்தில் ஊறியிருந்தான், ஆளும் மாறியிருந்தான்.

மாலை சிற்றுண்டிக்குப் பிறகு உலகநாதரே அவனை அழைத்தபோது, வாசு மனம் உற்சாகத்தால் ததும்பியது.

என்னப்பா வாசு! உனக்குள்ளே இத்தனை சந்தோஷம் என்று பேச்சைத் தொடங்கினார் உலநாதர்

பெண்ணோடு சேர்ந்து வாழ்வது பெரிய தந்திரம என்று கூறினீர்களே?அதைப்பற்றித்தான் எனக்கு ஒரு சந்தேகம் என்று வாசுவும் ஆரம்பித்தான்.

ஆமாம்! ஆணும் பெண்ணும் திருமணத்தில் ஒன்று சேர்கின்றார்கள் என்றால் அது பிரயாணத்தின்போது

ஏற்படுகின்ற பழக்கம் போல, கொஞ்ச நேரம் பேசிச்சிரித்து விட்டு பிரிந்து போகின்ற காரியமல்ல.

வாழ்கின்ற காலம் வரை, இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாது மகிழ்ச்சியாக வாழ்வதைத்தான் 'இல்லறம்' என்றனர். அதையே 'நல்லறம்' என்றதற்குக் காரணம். அந்த இல்லறம் மூலமாக பல நல்ல காரியங்கள் புரிவதற்குப் பயன்படுவதால்தான் என்று உலநாதர் கூறினார்.

வாசு சாய்ந்து கொண்டிருந்தவன், இப்பொழுது நன்றாக உட்கார்ந்து கொண்டு கேள்வியைக் கேட்டான்.

கணவனும் மனைவியும் இணைந்தே எங்கு வாழ்கின்றார். அதற்குரிய சூழ்நிலைதான் குடும்பத்தில் அமைவதே இல்லையே?

குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை அமைவதெல்லாம் மனதால் தான் என்பதை, மனிதர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதால்தான். 'மனம் போல் வாழ்வு' என்றனர் நமது முன்னோர்கள், மனமே எல்லாவற்றிற்கும் காரணம்.

கடவுளை எதிர்த்து, தேவலோகத்தின் புரட்சி செய்தான் சாத்தான், கடவுள் மேல் படையெடுத்தான். தாக்கினான். அவனைத் தண்டிக்க விரும்பிய கடவுள், மின்னல் படையை ஏவி அவனையும் அவனது படையையும் வீழ்த்தி நரகலோகத்தைப் படைத்து அதில் தள்ளி மூடிவிட்டார். விழுந்த மயக்கம் தெளிந்த சாத்தான், என்ன கூறினானாம் தெரியுமா?

"சொர்க்கமும் நரகமும் இடத்தால் அமைவது அல்ல சொர்க்கமும் நரகமும் மனதால்தான் அமைகிறது. என் மனதாலேயே இந்த நரக வாழ்வையும் சொர்க்கமாக்கி விடுவேன்" என்று கூறியதாக மேனாட்டுப் பெருங்கவிஞன் மில்ட்டன் தனது நூலில் கூறுகிறார்.

இல்லறத்தில் ஈடுபட்ட இருவரும், உடலால் இணைந்து அன்பைப் பகிர்ந்து கொண்ட நேரம் போக, மற்ற எல்லா நேரங்களிலும் மனத்தால் தான் பகிர்ந்து கொண்டு வாழ வேண்டும்.

மனத்தினால் எப்படி வாழ முடியும்?

மனம் என்பது உணர்வுடன் நிறைந்த மாபெரும் கடலாகும். அதிலே,நொடிக்கொரு நினைவலைகள் நிறைந்து பொங்கித் துள்ளி, முன்னேறிக் கொண்டேவரும். அலைகளின் வேகத்திற்கேற்ப மனநிலை மாறுபடும். அவ்வாறு ஆழ்ந்து எழுகின்ற அலைகளை அறிவு கொண்டு அடக்கி, சீராக சிறப்பாக செயல்பட வேண்டியது தான் தம்பதிகளின் கடமையாகும்.

அதனால்தான், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். என்று முன்னமேயே கூறினேன்.

கணவனது இல்லத்தை ஆள்பவளாக, உள்ளத்தில் வாழ்பவளாக மனைவி என்று மங்கள பெயருடன், புனிதப் பயணமாகிய வாழ்க்கையை மேற்கொள்ள ஒரு பெண் வருகிறாள்.

வருகின்ற மங்கையிடம் பெறுகின்ற சுகமும் சொர்க்கமும் தருகின்ற அன்பும் இன்பமும் இருவருக்குமே சொந்தம் என்பதைவிட, அவர்களைச் சார்ந்துள்ள உற்றார் உறவினர்களுக்கும் உண்டு என்பதை அவர்கள் உணர வேண்டும். தம்பதியர் மகிழ்வாக வாழவேண்டும் என்பது தானே சுற்றத்தாரின் ஆசை!

இவ்வாறு, வாழ வருகின்ற பெண்ணுக்கென்று, தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்கள் உண்டு. எண்ணங்கள்

நோக்கங்களும் உண்டு என்பதை கணவன் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

மனைவியின் மேற்கூறிய மனநிலையைப் புரிந்துகொண்டு, அவளது நோக்கங்களுக்கு, ஆசைகளுக்கேற்ப, தன்னை முதலில் இயைபுபடுத்திக் கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெற்றுக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். அவளது லட்சியமும் நோக்கமும் தனது வாழ்வின் முன்னேற்றத்திற்கு மிகவும் பயன்படும் என்று அறிந்து கொள்ள நேர்ந்தால், அவற்றை நிறைவேற்றும் முயற்சிகளில் தங்கு தடையின்றி, தாராளமாக ஈடுபடுதல் நல்லதாகும்.

நீங்கள் சொல்வதைப் பார்த்தால்,பெண்ணையே பின் பற்றி வாழ்ந்தால் தான் மகிழ்ச்சியுடன் வாழமுடியும் என்கிறீர்கள்.! அப்படித்தானே!

இங்கு தான் நீ தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். பெண்ணைப் புரிந்துகொண்டு நடக்க வேண்டும் என்பது "பெண்டாட்டி தாசனாக வாழ், அவள் முந்தானையைப் பிடித்துக் கொண்டே பின்னாடி செல்' என்பது அல்ல.

வாழ்க்கை என்பது உடலால், அறிவால் நன்கு வளர்ந்து, முதிர்ச்சி பெற்ற இருவர் இணைந்து, துணிந்து வாழ்கின்ற நிலையாகும்.

மனைபுகுகின்ற மனைவியை மனமார வரவேற்க முனைவது போலவே, அகம் உருக அன்புடன் நேசிக்க வேண்டும். நீ நேசிக்கிறாய் என்பதை அவள் உணரும் பொழுது தானே, உன் நிழலாக வர அவள் துணிகிறாள். அதனால்தான் அவளது நினைவோடு உன்னை நிலைநிறுத்திக் கொள்ளுமாறு கூறினேன்.

கணவன் உட்பட, கணவனின் பெற்றோர்கள், தங்கை, தம்பி, அக்காள், அண்ணன், மற்றும் உடன் பிறப்பு

எல்லோருமே அவளுக்குப் புதியவர்கள். அது ஒரு புதிய சூழ்நிலை. அந்தப் புதிய சூழ்நிலையில் பழகிக் கொள்ளுமாறு தூண்டுவது கணவன் தானே! அவளது லட்சியம் நோக்கம் புரிந்தால் தானே, தன் குடும்பத்துடன் எளிதாக இணைக்க முடியும்.!

மனைவியைப் பெருந்தன்மையுடன் நடத்தி, தன் கணவனும் மற்றவர்களும் தன்னுடன் பிரியமாகவே நடத்துகிறார்கள், நடக்கின்றார்கள் என்ற நம்பிக்கையை கணவன் தன் மனைவிக்கு ஊட்ட வேண்டும்.

அவளுக்கென்று ஒரு அந்தஸ்து வீட்டில் இருக்கிறது. பொறுப்புக்கள் இருக்கின்றன என்ற நினைவினை அவளுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகப் புகுத்தவேண்டும்.

ஆரம்ப காலத்தில் இந்த நம்பிக்கையை, இனிய உணர்வை ஊட்டி, புதிய சூழ்நிலையிலிருந்து அவளை விடுவித்து, புதிரைப் போக்கினால்தான், மனைவிக்கு அந்த இல்லத்திலும், நடத்தவிருக்கும் இல்லறத்திலும் இயல்பான பிடிப்பு ஏற்படும்.

மனைவியை உடலால் திருப்திபடுத்திவிட்டால் போதும் எல்லாம் சுகமாக சுமுகமாக நடந்துவிடும் என்று முன்பு கூறினீர்களே?

உண்மைதான், மனைவியை உடலால் திருப்திபடுத்தினால் போதும் என்பது அடிப்படை ஆதாரமானது கிடைத்துவிட்டால், அதனால் மனம்மகிழும், வாழ ஆசை ஏற்படும். அந்த ஆசைக்குரிய பிடிப்பு அங்கு இருக்க வேண்டாமா?

உடலால் மனைவியை கவர்வது போலவே, உணர்வாலும் மனைவியைக் கவர்ந்து, கலந்து வாழ்வதும் ஒரு ஒப்பற்ற கலைதான்.

உயிருக்கும் மேலானபெற்றோர்கள் உடன்பிறந்தோர்களை,உரிய சுற்றத்தை, பிறந்த வீட்டில் பெற்றிருந்த உரிமையை, சுதந்திரத்தை, செல்வத்தை, புதிதாக வரும் கணவன் என்ற ஒருவனுக்காக, எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டு தியாகம் செய்துவிட்டு, மனைவி என்ற பெயரில் நுழைகின்ற, வலது காலடிவைத்து வீட்டுக்குள் வருகின்ற பெண்ணுக்கு.'தன் கணவனால் பரிபூரண அன்புடன் விருப்பத்துடன்தான், ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறோம்' என்ற எண்ணம் மனதில் ஏற்படுவது போல கணவன் நடந்து கொள்ள வேண்டும்.

கணவனைப் போலவே, கணவனது தாயும் தந்தையும், குடும்பத்தாரும், அந்தப் பெண்ணை அந்தரங்க சுத்தியுடன் தங்கள் குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக்கொண்டது போலவே ஆதரவு தந்து நடந்துகொள்ள வேண்டும்.

நாங்கள் இப்பொழுது உன்னை இனிமையாக ஏற்றுக்கொண்டோம். தொடர்ந்தும் இதுபோலவே, எல்லோரும் இருப்போம் என்று நடைமுறையில் காட்டவிருக்கும் கடமையை கணவனே ஏற்றுக்கொண்டு, எந்தவிதக் குறைவுமில்லாமல் செய்யவேண்டும்.

அந்தக் கடமை எவ்வாறிருக்கும் என்பதைக் கொஞ்சம் விளக்கிச் சொன்னால் நன்றாக இருக்கும்?

கணவன் வீட்டில் புதிதாக வந்திருப்பதால், என்ன செய்வதென்றே மனைவி புரியாமல் தடுமாறுவாள். எந்தெந்தக் காரியங்கள் இங்கு வழக்கமாக நடக்கும்?எப்படிச் செய்தால் இந்த வீட்டில் உள்ளவர்களுக்குப் பிடிக்கும்? எப்பொழுது எதைச் செய்ய வேண்டும் என்பன போன்ற முக்கியமான வீட்டுக் காரியங்களை மனைவிக்குப் பயம் ஊட்டாமல், பக்குவமாக, மனதில் படும்படி

பதமாகவே,சொல்லித் தரவேண்டியது, கணவன் கடமை யாகும். உதாரணத்திற்குக் கூறினேன், அவ்வப்போது தேவையானதெல்லாம் கணவனே அறிவித்தால் நல்லது.

மனைவி செயல்படும்பொழுது, தவறு நேரலாம், குறைகள் நிகழலாம், மீறி சேதமும் விளையலாம். அதையெல்லாம் இயற்கைதான் என்று மேம்போக்காகச் சொல்லிவிட்டு, தள்ளிவிட்டு, தவறுகள் மீண்டும் நேராவண்ணம் மனைவியை ஊக்குவிக்க வேண்டும்.

மனைவியின் திறமையை புகழ்வதன்மூலம். மேலும் குடும்பக்காரியங்களில் ஒருவித பிடிப்பு ஏற்படும்படியும், நடப்புக்காரியங்களில் நலமாக ஈடுபடும்படியும் மேலும் தூண்டமுடியும்.

மனைவியின் தவறுகளைக் குத்திக் காட்டுவதும், உடனே கோபித்துக்கொண்டு குதிப்பதும், கொடுமையான வார்த்தைகளைக் கொட்டுவதும், மனைவியின் மனதைப் புண்படுத்துவதும். தேநீர் குடிக்கும்போது நாக்கு சுட்டுக்கொண்டால் குளிர்ந்த பானம் குடிக்கும் போது கூட ஊதி ஊதித்தான் குடிக்கத்தோன்றும் என்பது போல, கோபமுள்ள கணவனிடம், மனைவி பயந்தே காரியங்களைச் செய்வாள், அந்தப் பதட்டத்தால், மீண்டும் தவறுகள் அதிகம் நேரிடுமே தவிர குறையாது.

எனவே மனைவிக்குத்தைரியம் தந்து, பழக்குவது கணவன் கடமையாகும். கண்போன்று அமைவதால்தான் 'கணவன்' எனப்படுகிறான் என்பார்கள். துணையாக இருப்பதால்தான் துணைவன் என்றும் ஆகிறான். நான் துணைவருவேன் ஒன்று ஒருவன் மனதுக்குள்ளேயே நினைத்துக்கொண்டிருப்பதனால் மட்டுமே, அந்தப் பெண்ணுக்கு தைரியம் வந்துவிடாது. ஆகவே, மனைவியின்

மனநிலைக்கேற்ப, ஒரு சில நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து நடந்து கொள்வது மிகமிக நலம் பயக்கும்.

ஒருசில நிகழ்ச்சிகள் என்றால்?

இருவரும் முதன் முதலாக சந்தித்த நாளை, நினைவுப்படுத்திப் பேசுவது! சந்தித்த வேளையில் பேசிக் கொண்டதை ஞாபகம் வைத்து உரையாடுவது! இருவருக்கும் திருமண நாள்! இதுபோன்ற முக்கிய நிகழ்ச்சிகளில் ஏதாவது ஒரு பரிசினைத் தந்து அல்லது கொண்டாடி மகிழ்வது.

இவ்வாறு மனைவியை திகைப்பூட்டித் திருப்தி செய்யும் பொழுது, இன்னும் ஒன்றை ஆண் நன்றாக நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

தன் தாயின் குணநலன்களைப் பற்றியும், கொள்கை பற்றியும் தன் மனைவிக்கு அறிவூட்டி, அவைகளுக்கேற்ப நடந்து கொள்ளுமாறு குறியிட்டுக் காட்டுவதுடன், மாமியாருக்கும் மருமகளுக்கும் சுமுகமான உறவு வர, சுலபமான வழிகளைக் கூறவும், கணவன் முயலவேண்டும். இருவருக்கும் ஒரு பாலமாக இருப்பது நல்லது. அதனால் இருவரின் மகிழ்ச்சியான வாழ்வுக்கும் வழியமைத்த பணியைத் திறம்பட மேற்கொண்டவனாகிறான்.

இன்னும் ஒருசில குடும்பத்தில், குடியிருக்கும் இடம் சிறிதாகவும், இருப்பவர்கள் அதிகமாகவும் இருக்க, கணவனும் மனைவியும், நேருக்கு நேர் நின்று பேசிக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கூட கிடைக்காத சூழ்நிலையும் அமைந்திருக்கும். அதே சமயத்தில், கணவனும் மனைவியும் கூடிப்பேசி, சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற கட்டுக்கடங்கா ஆசையும் கரை கடந்திருக்கும்.

அத்தகைய சூழ்நிலையில், தன் மனைவியின் அந்தரங்க ஆசைகளையும் உணர்வுகளையும் பரிமாறிக் கொள்ளுதற்கேற்ற சூழ்நிலையினை வகுத்து கணவனே

பொறுப்பேற்றுக் கொண்டு, சந்தர்ப்பங்களை உண்டுபண்ணித் தரவேண்டும்.

மேலே கூறியவற்றை கணவனுக்குரிய கடமையும் பொறுப்பும் என்று நீ உணர்ந்து கொண்டாலும், இன்னும் சில கருத்துக்களைக் கூறுகிறேன்.

கணவன் மனைவியின் கண்களுக்கு எப்பொழுதும் கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும். அந்தக் கவர்ச்சிக்காக எங்கே போவது என்று கேட்க வேண்டியதில்லை. இருக்கும் ஆடைகளில் சுத்தமானதாக இருப்பதை எப்பொழுதும் அணிந்து கொள்ள வேண்டும்.

கம்பீரமாக நிற்பது, நடப்பது, சிரிப்புடன் செழிப்புடன் வீட்டில் உலா வருவது போன்ற காரியங்கள் மனைவியின் மனதைக் கவர்வனவாகும்.

இவ்வாறு மனைவியின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, நம்முடைய வசதிக்கேற்ப அவளைத் திருப்பிவிட்டு விட்டால், வாழ்வில் நிச்சயம் மகிழ்ச்சியே நிலவும்.

மேலே கூறிய கருத்துக்களுக்கு அப்பாலும், பல சந்தர்ப்பசூழ்நிலைகள் ஏற்படலாம். அவ்வப்போது ஏற்படும் நிலைமைக்கு ஏற்ப, எதையும் அறிவுபூர்வமாகவே அணுகி, சமாளிக்க வேண்டியது தான் முறையாகும். உணர்ச்சிபூர்வமாக பிரச்சினையை அணுகுவது தவறாகும்.

உடலாலும் உணர்வாலும் மனைவியிடம் அணுகி மகிழ்வுடன் வாழும் முறைகளைப் புரிந்து கொண்டது போலவே, சமூக அந்தஸ்து நிலையில் அவளுடன் வாழும் வகைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

**சமூக நிலை**

மனைவிக்கென்று அந்தஸ்து உண்டா? எந்த

கொடுத்தால், மடம் பிடுங்குவாள் என்று பழமொழி இருக்கிறதே?...

கணவனுக்கு கட்டுப்பட்டு, மனைவி வாழவேண்டி வந்தவள் என்றாலும், மனைவிக்கும் உணர்ச்சிகள், ஆசைகள், மனப்பூர்வமான விருப்பங்கள் உண்டு என்பதை உனக்கு முன்னரே கூறியிருக்கிறேன். அதைத்தான், பெண்ணுக்கு ஆசாபாசங்கள் உண்டு, மானாபிமானங்கள் உண்டு என்பதுடன், ஆறறிவுள்ள அருமையான புனிதப் பிறவி என்றும் கணவன் உணர்வதில்தான், குடும்ப வாழ்க்கையின் அடித்தளமே அடங்கிக்கிடக்கிறது,

அந்தரங்கத்தில் எவ்வளவு அந்நியோன்னியமாக தம்பதிகள் வாழ்ந்தாலும், சுற்றுப்புற சூழ்நிலையில், சமுதாயத்தின் முன்னிலையில் மனைவிக்கென்று ஒரு அந்தஸ்தை, கணவன் நிச்சயமாகத் தரவேண்டும்.

அந்த அந்தஸ்தானது, மற்றவர்கள் முன்னிலையில் அவளுக்கென்று தகுதியான ஒரு நிலையினை அமைத்துத் தருவதாக இருப்பதுதான் முறையாகும்.

மனைவி பெறுகின்ற மதிப்பும் மரியாதையும், பெருமையும் புகழும் கணவனையே சாரும் என்பதால், மனைவியை மற்றவர்கள் முன்னிலையில் கௌரவமாக நடத்த வேண்டும் என்பது எவ்வளவு முக்கியம் என்பதை நினைத்துப் பார்த்துக் கொள்வது நல்லது.

மற்றவர்கள் முன்னிலையில் கடூரமான வார்த்தைகளைப் பேசுவதும், கேலியும் கிண்டலும் செய்து கேவலப்படுத்துவதும், அலட்சியமாகப் பேசி அவமானப்படுத்துவதும் மன்னிக்க முடியாத தவறாகும். இது போன்ற தவறுகளை கணவன்மார்கள் கட்டாயம் தவிர்க்கவேண்டும்.

ஏன் இப்படி கூறுகிறேன் என்றால், மற்றவர்கள் முன்னிலையில் மனைவியின் தரம் குறைந்து போகும்பொழுது கணவன் மனைவி இருவரது மதிப்பும் தானே பாழாகிறது? அதை நினைத்துப் பார்க்க வேண்டாமா?

இன்னும் சிலர் இருக்கிறார்கள். மனைவியின் சாதாரண தவற்றைக்கூட மற்றவர்களிடம் போய் விமர்சிப்பது. விமர்சனம் செய்வதுமட்டுமல்லாமல், அவர்கள் முன்னாலேயே கண்டிப்பதும், தண்டிப்பதும், திட்டுவதும் அடிப்பதுமாக, தங்கள் கோபத்தைத் தீர்த்துக் கொள்வார்கள். 'இதை மிருகத்தனமான ஆடவர் நடத்தை' என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

மனைவியின் தவறுகளைத் தனியான இடத்திலே வைத்து தகுந்த முறையில் அறிவுரை கூறி, திருத்தமுயல்வதே தரமுள்ளவர்களின் பண்பாகும்.

குற்றம் கடுமையாக இருந்தால் கூட தண்டிக்கக் கூடாதா?

சிறுதவறென்றால் பெரிதுபடுத்தாது விட்டு விடலாம். இல்லையென்றால், அன்புடன் அறிவுரை கூறலாம். எதையும் அதிக விவாதத்திற்குக் கொண்டு வந்தால், வாக்குவாதம் எல்லை மீறிப்போய், அதுவே புதிய தொல்லையாகப் படமெடுத்து ஆடுமே? துயரத்தைப் போக்க வாதத்தைத் தொடங்கி, அந்தத் துயரத்தைப் பெரிதாக்கிக் கொண்டு, அதற்குள்ளே புதைந்து போவது அறிவுடையோர்க்கு அழகாகுமா?

கடுமையான குற்றம் என்று கணவன் கருதினால், கட்டாயம் தண்டித்துத்தான் ஆக வேண்டும் என்றால், அதுவே சரியான செயல்முறை என்றால், தண்டித்தால்தான் தன் மனம் சாந்தியடையும் என்று கணவன் முடிவெடுத்தால், அதற்காக எவ்வாறு தண்டிக்க முடியுமோ, அதைத்தான்

செய்ய வேண்டும்! அக்கம்பக்கம் உள்ளவர்கள் என்ன ஏது என்று கேட்டு, வீட்டிற்குள் வந்து, விசாரிக்கின்ற அளவுக்குப் போனால், அது விரசத்திலும் விரசமாகத் தோன்றாதா?

மறைமுகமாக செயல்படுவதுதான் முறை, எந்த சண்டையும் கணவன் மனைவிக்குள் இருப்பதுதான், அவர்களது பெருமையை உயர்த்தும். மீறி வெளியே வந்து பரவி விட்டால் அது இருவருக்குமே தீராத அவமானம் அல்லவா?

கோபம் வரும்பொழுது கொஞ்ச நேரம் ஒதுங்கி வந்தால், ஆத்திரம் மறையும். ஆத்திரம் மறைய மறைய, அறிவு செயல்படத் தொடங்கும். நிதான நிலை வந்ததும், என்ன செய்ய வேண்டும் என்ற நினைவும் துலங்கும். ஆகவே, எப்பொழுதும் பொறுமையுடன் பிரச்சினையை அணுகவே பழகிக்கொள்ளுதல் வேண்டும்.

மனைவியைத் தண்டிக்காமல் விட்டுவிடவேண்டும் என்கிறீர்கள்! பிரச்சினையை பேசியே தீர்த்துக் கொள்ளவேண்டும் என்கிறீர்களா?

குழந்தையென்றால் அடித்துத் திருத்தி விடலாம். வளர்ந்து விட்டவள் அல்லவா மனைவி! அறிவுரை கூறி திருத்த முயல வேண்டுமே தவிர, தீர்மானமாகத் தண்டித்தால் தான் அறிவு வரும் என்பது இயற்கைக்கு முரணானதாகும்.

அடித்துப் பணிய வைக்கப்போய், அதுவே இரண்டு மடங்காக, இடக்காக ஏற்பட்டுப்போனால் என்ன செய்வது?

மனைவியின் தவறை உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும். மீண்டும் அந்தத் தவறினை செய்யாத அளவுக்கு பக்குவப்படுத்த வேண்டும். அன்புதான் அனைத்துக்கும்

ஆத்திரம் அனைத்தையும் கெடுக்கும் என்பதால் மனைவியை வாட்டி வதைத்துத்தான் புரிய வைக்க வேண்டும் என்பது பொருந்தாத கொள்கையாகும்.

மனைவியை அடித்தால்தான் வழிக்கு வருவாள் என்று அடிக்கடி அடித்துத் துன்புறுத்தித் தன் வழிக்குக் கொண்டு வர முயன்று தோற்றுப்போய், கணவன் என்ற மதிப்பையும் இழந்து, இறுதியில் தன் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டவர்களை, எத்தனையோ ஆண்களை நான் பார்த்திருக்கிறேன். கொடிய அடிதடி முறையில் மனைவியை தன் வழிக்குக் கொண்டுவர முயற்சிப்பது இருட்டு அறையில் கறுப்பு பூனையைப் பிடிக்க முயன்றவன் நிலைபோல் ஆகிவிடும்.

ஆகவே, எந்த இடத்திலும், எந்த சூழ்நிலையிலும், மனைவியின் மதிப்பும் பெருமையும், உயர்நிலையும் மற்றவர்கள் முன்னால் தாழ்ந்துவிடாமல், தணிந்து போய்விடாமல் இருக்குமாறு, கணவன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் மனைவி பெறுகிற மதிப்பானது, கணவனது செயலால் தான் உண்டாகிறது என்பதால், கணவனின் பழக்க வழக்கம், அன்றாட நடைமுறைகள், சொல், செயல் அத்தனையும் சிறப்பாக, பிறர் போற்றும்படி அமைந்திருக்க வேண்டும் என்பதனையும் கணவன் மறக்காமல் கடைபிடித்தொழுக வேண்டியது கடமையாகும்.

சிலரது குடும்ப வாழ்க்கையில் அடிக்கடி கசப்பும் வெறுப்பும் மீறி சண்டை சச்சரவு ஏற்படக் காரணம் என்ன?

மகிழ்ச்சியாக வாழத்தான் மண வாழ்க்கையைத் தேடுகிறோம். மனக் குமைச்சலையும், நமைச்சலையும்

நடைபெறுகின்ற அனைத்துக்கும் நாமேதான் காரணம் என்பதை குடும்பம் நடத்தும் தம்பதிகள் உணர்ந்து கொள்ளாததே முதற்காரணமாகும்.

திருமணத்திற்கு முன்னர், தனியாக வானம்பாடி போல் அலைந்த ஆண் பெண் இருவருடைய மனதிலும், அபரிதமான ஆசைகள் ஆலோலம் பாடிக்கொண்டிருந்திருக்கும். அவைகள் அனைத்தும் திருமண வாழ்க்கையில் கிடைக்காமற் போகும்பொழுது, நடைமுறையில் வராத பொழுது, இருவருடைய மனதிலும் சற்று ஏமாற்றம் ஏற்படுகிறது. இடைவெளி உண்டாகிறது. எரிச்சலும் பெருமூச்சும் மேலும் மேலும் பெருக, பேரிழப்பு ஏதோ தன் வாழ்வில் நேர்ந்துவிட்டதுபோல பூகம்ப உணர்ச்சிகளுக்கு ஆளாகி, பொங்கி வரும் கோபத்திற்கு உள்ளாகிவிடுவதால், கணவன் மனைவி இருவரும் கீரியும் பாம்பும் போல ஆகி விடுகின்றனர்.

எல்லாருடைய வாழ்க்கையிலும் ஏமாற்றம் ஏற்படுவது சகஜமே! இது பொதுவான அதிருப்திதான். நினைத்த தெல்லாம் வாழ்க்கையில் நடந்து விட்டால், நிறைவேறி விட்டால், பிறகு உலகம் என்பது சர்வசாதாரணமாகிவிடுமே! அதனால்தான், வாழ்க்கையை, "பாதையில்லாத பாதாளலோகம்" என்று சிலர் வருணிப்பார்கள். எது எப்பொழுது நடக்கும் என்று யார் கண்டது?

அறியாமையால் தங்களை அவதிப்படுத்திக் கொண்டதால், கணவன் மனைவி இருவருக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்படுகிறது.

திருமணத்திற்குப் பிறகு வாழ்க்கையில் வரும் நடைமுறை என்றீர்களே? அந்த நடைமுறை என்றால் என்ன என்பதைக் கூறுங்கள் மாமா?

வாழ்க்கையை வளமாக வாழ்வதற்கு என்று ஒரு சில அடிப்படையான தேவைகள் உண்டு, அடிப்படை தேவை என்பது உடற்பசிக்கும், வயிற்றுப் பசிக்கும், நாகரிகப் பசிக்கும் பொருந்தும்.

தம்பதிகளுக்குள்ளே பெறும் இனிய, உடல் உறவுகள்; அதற்குப்பிறகு பெறுகின்ற வயிற்றுப் பசிக்குத் தேவையான சுவையான உணவு வகைகள்; அத்தனைக்கும் ஈடாக, மற்ற வரிடையே மதிப்புடன் வாழ உடை, உறையுள், அணிகலன்கள் போன்றவற்றிற்கான பொருளாதார வசதிகள், இவை எல்லாம் நிறைவாகக் கிடைக்கவேண்டும் என்றே எல்லோரும் ஆசைப்படுகின்றனர்.

நிறைய கிடைக்கும்பொழுதுதான் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்படும். நடைமுறையில் இவை கிடைக்காத பொழுது, வாழ்க்கைக் கசந்து போவது உண்மைதான்.

இன்னும் கொஞ்சம் விளக்கமாகவே சொல்கிறேன்.

உடலுறவு கொள்ளும்போது இப்படி இருக்கலாம். அப்படி சிரிக்கலாம் என்றெல்லாம் திருமணத்திற்குமுன் இமாலயக் கனவு கண்டு, தேனிலவுக் காட்சிகளையெல்லாம் கற்பனை செய்து மனதில் ஏற்றுக்கொண்டு, பின்னர் செயல்முறையில் இருவரும் இறங்கும்பொழுது, எதிர்பார்த்த இனிய சுகநிலை கிடைக்காது போனால், இன்ப உணர்ச்சியின், தேகக்கிளர்ச்சியின் உச்சநிலையினை எட்ட முடியாத நிலையில் சறுக்கி விழுந்தால், அடிக்கடி அந்த நிலைக்கு ஆளாகும் ஆண் பெண் இருவருக்கும் சண்டை வரத்தானே செய்யும்.

## பொருளாதாரநிலை

வாழ்க்கை கசந்து போவதற்கு உடலுறவு மட்டுமே ஆதாரம் என்கிறீர்கள் இல்லையா!

பல காரணங்களுக்கிடையில், உடல் உறவுக் காரணம் தலையாய இடம் வகிக்கின்றது. இனிய வாழ்க்கைக்கு அடிப்படை பொருளாதாரம் தான்.

பண வசதியில் தடுமாற்றம் ஏற்பட்டால், மன அமைதியில் விரிசல் ஏற்படும். இத்தகைய பணவசதியை படைத்துக்கொள்வதும், பராமரித்து பாதுகாத்துக் கொள்வதும் தம்பதிகள் கையில் தான் இருக்கிறது.

ஆணுக்கு ஆண்மை உண்டு. வலிமை உண்டு. செயல்படும் திறமை உண்டு. சீரான முடிவெடுக்கும் ஆற்றலும், முன்னேறிப் போகின்ற வேகமும், ஆராய்ந்தறியும் பண்பும், காரியத்தை நிறைவேற்றும் கடமை உணர்வும் நிறைய உண்டு.

பெண்ணுக்கோ, பெண்மையும், மென்மையும், நியாய உணர்வுத் தன்மையும், உணர்ச்சி வயப்படும் தன்மையுடன் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நெகிழ்ந்து தரும் தன்மையும் நிறைய இயல்பாகவே உண்டு.

இத்தகைய ஆற்றல் படைத்தத் தம்பதிகள் இருவரும், இணைந்து செயல்பட்டால் இருவரின் வாழ்க்கையும் இனிதாகவே அமையும்.

இரண்டு உள்ளங்களும் மாறுபடுகிறபொழுது, அங்கே சுயநலம் சுழன்றுவீசும். அந்த சுழற்சியிலே அன்பும் பாசமும் கலைந்தோடி விடுகிறது. வெறும் ஏமாற்றுச்சிரிப்பும் வாய்ப்பேச்சும், பசப்புத்தன்மையும், வெறும் வாய்ப் பந்தலும் அன்றாட வாழ்வு நிகழ்ச்சிகளாய் அமைந்து விடுகின்றன.

விருந்துக்கு போய் வயிற்று வலியுடன் வந்த கதை போல, மகிழ்ச்சிதேடப் போய், வேதனையை சுமந்து கொண்டு வந்த நிலையாய் மாறிப் போய்விடும்.

ஆகவே, கணவனும் மனைவியும் உண்மையுடன் பேசி உறவாடி, அதன்வழியே உண்மையான சூழலின் சிக்கலை உணர்ந்து, அதிலிருந்து மீண்டுவரும் வழியை திட்டமிட்டு வெற்றியுடன் வாழ முயலவேண்டும்.

அவ்வாறு முயற்சிக்காமல், தங்களுடைய வாழ்வு மற்றவர்களுடைய வாழ்வைப் போல் அமையவில்லையே என்ற மனக்குறையுடன் எப்பொழுதும் வாழவே கூடாது.

ஒவ்வொரு குடும்பத்திலும் கோபதாபம் உண்டு. கஷ்டநஷ்டம் உண்டு. ஏற்றத்தாழ்வு உண்டு. வறுமை செழுமை உண்டு. ‘சாவே இல்லாத குடும்பத்தில் கடுகு வாங்கி வா! உன் புத்திரனை உயிர்ப்பித்துத் தருகிறேன்’ என்ற புத்தபிரான் ஒரு பெண்ணுக்கு உண்மை நிலையை உணர்த்தியதாக ஒரு நிகழ்ச்சி உண்டு. அதுபோல், ‘வீட்டுக்கு வீடு வாசற்படி’ என்ற பழமொழியின் உண்மை தெளிந்து, சச்சரவு கொள்ளாமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

சச்சரவினை பெரிதுபடுத்தாமல், சமாதான முறையிலே, சச்சரவுக்குரிய வழியைச் தீர்த்துக் கொள்வதே அறிவுடையோர்க்கு அழகாகும்.

சச்சரவு வந்தால் எப்படி தீர்த்துக் கொள்வது?

குடும்பத்தில், பணம் பற்றி பேச்சு வந்தால்தான், சச்சரவு அதிகம் எழும். குடும்பத்தில், யார் பணத்தை வைத்துக்கொண்டு செலவு செய்வது? என்பதில்தான் பிணக்கும் போராட்டமும்.

கணவனிடம் பணம் இருந்தால் கண்டபடி செலவழித்துவிடுவார் என்றும் கடுகடுக்கும் மனைவியும்; மனைவியிடம் இருந்தால் விருப்பம் போல் ஏதாவது செலவு செய்துவிடுவாள்; தன்னை மதிக்க மாட்டாள் என்று

முணுமுணுக்கும் கணவனும், தன்னிடமே பணம் இருக்க வேண்டும் என்று முயல்கிறபொழுது தான் சிக்கலே சிலிர்த்தெழுகின்றது.

பணம் வைத்து செலவு செய்பவருக்குத்தான் அதிக கௌரவம். அதிக பெருமை என்ற எண்ணத்திலேதான் இவ்வாறு தம்பதிகளுக்குள் சண்டை எழுகிறது.

ஒருசிலர், மனைவியிடம் கொடுக்கும் பணத்திற்கு பைசாவுக்குக்கூட கணக்கு வேண்டுமென்று பிடிவாதம் பிடித்து சண்டைபோடுவார்கள். இன்னும் சிலர், தேவையில்லாததை யெல்லாம் ஏன் வாங்கித் தொலைக்கிறாய் என்று திட்டுவார்கள்.

கணவனிடம் சில வேண்டாத செலவு முறைகள் இருக்கும். அதை மனைவி குத்திக்காட்டி, ஏன் பணத்தைப் பாழாக்குகின்றீர்கள் என்று போராடுவாள்.

இவ்வாறு பணப் பிரச்சினை எழும்பொழுதெல்லாம், வீட்டிலே அமைதி நிலைக்காது. ஆனந்தம் தலை தூக்காது.

இந்தப் பிரச்சினையை அமைதியாக கணவனும் மனைவியும் தீர்த்துக்கொள்ள வேண்டும். மனைவிக்குப் பணம் எதற்கு என்று வாதாடுபவர்களும் உண்டு.

மனைவிக்கு பணம் தேவையில்லை யென்றாலும் அவளிடம் செலவுக்கென்று பணம் கொடுத்தால், கஞ்சத்தனமாக, கண்டதற்கெல்லாம் கணக்குக் கேட்காத பெருந்தன்மையுடன் ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

மனைவிக்கென்று தருகின்ற பணத்தை, அவள் மனம் போல் செலவு செய்ய அனுமதிப்பதானது, பல வழிகளில் நல்ல பயனையும் தரும்.

தனக்கென்று செலவு செய்ய, தன்கையில் கொஞ்சம் பணமிருக்கிறது என்று எண்ணும்பொழுது, மனைவிக்கு ஒருவித உரிமைப் பற்றும், மனத்தெம்பும், செழிப்பும் உண்டாகும்.

தன் தோழிகள் மத்தியிலும் கம்பீரமாக நடைபோடக் கூடிய ஒருவித சக்தியும் இருக்கும்.

இல்லையேல்,'சோற்றுக்காக உழைக்கும் ஒரு வேலைக்காரி; கணவனுக்கு தேவைப்படும்பொழுது இச்சையைத் தீர்க்க இருக்கும் தாலி கட்டிய ஒரு தாசி' என்ற நிலைமைக்கு மனைவியைத் தூண்டிவிடும் ஒரு விபரீத புத்தியைத் தந்துவிடும்.

எனவே, மனைவியின் மனமறிந்து பண விஷயத்தில், பக்குவமாக நடந்துகொண்டால், கணவனுக்கு கவலைகள் வர நியாயமில்லை.

இன்னும் சொல்லப் போனால், பண விஷயத்தில் கொஞ்சம் மனைவிக்கு அதிகமாகவே உரிமை வந்து, குடும்பப் பொறுப்பை ஏற்கச்செய்து, குடும்பத்தையும் நடத்திச் செல்லும் உரிமையையும் கொடுத்துவிட்டால், கணவனுக்குரிய குடும்பச்சுமை பாதி இறங்கினாற் போலவும் இருக்கும்.

பெண்கள், எதையும் சமாளிக்கும் சக்தி படைத்தவர்கள். ஆகவே சுமுகமாகவே குடும்பத்தை நடத்திச் செல்லும் சாகசக் கலை அவர்களுக்கு இருக்கிறபடியால், நம்பிக்கையுடன், குடும்பத்தை நடத்தும் பொறுப்பை மனைவியிடம் விடும் கணவன், மகிழ்ச்சியாகவே வாழமுடியும் என்பது என் அனுபவம், என் நண்பர்களைப் பார்த்தும் அறிந்து கொண்ட பாடம் என்றார் உலகநாதர்.

மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்றால், கணவன்தான் முயற்சிக்க வேண்டும் என்கிறீர்களா? மனைவிக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லையா மாமா?

இரண்டு கைகளும் தட்டினால் தான் ஓசை. இரண்டு விழிகளும் பார்த்தால்தான் காட்சி. இதை என்றும் மறந்து விடக்கூடாது வாசு.

மனைவியும் கணவனுடன் ஒத்துழைத்தால்தான் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும். ஆகவே, மனைவி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று ஒரு சில குறிப்புக்களைக் கூறுகிறேன்.

மனைவியானவள், தன் கணவன் தன்னை மனமார நேசிக்க வேண்டும் என்று விரும்புவது போலவே, தானும் தன் கணவனை உளமார நேசிக்க வேண்டும். மனமார மதிக்க வேண்டும்.

கணவனது லட்சியங்களை, நோக்கங்களை, கருத்துக்களைப் புரிந்துகொண்டு அவைகளுக்கேற்ப கணவனுடன் ஒத்துழைப்பதுதான் கற்புள்ள மங்கைக்கு கடமையாகும்.

தன்மேல் படுகின்ற சூரிய ஒளியை உடனே அழகாகப் பிரதிபலிக்கின்ற கண்ணாடியைப் போல, தன்மீது அன்பு செய்யும் கணவனுக்கு தங்குதடையில்லாமல், திருப்பித் தந்து திருப்திபடுத்தும் பொறுப்பை மனைவி நன்கு ஏற்று, அதன் வழி நடக்க வேண்டும்.

ஆசை அறுபதுநாள், மோகம் முப்பது நாள் என்பார்கள். அடிக்கடி நெருங்கிப் பழகுவதற்குரிய வாய்ப்பு தம்பதிகளுக்கு இருக்கிறது. பழகப்பழகப் பாலும் புளிக்கும். அதுபோன்ற எண்ணம் மனதில் இடம்பெறும்படி நடந்து

கொள்ளாமல், அன்றாடம் பூக்கும் புதுமலர்போல, அன்பால் தினமும், கணவனைப் பராமரித்து காத்துவரும் மனப்பான்மையை மனைவி அறிந்து நடக்க வேண்டும்.

கணவனது பணி என்ன, கடமை என்ன என்பதை அறிந்து, முடிந்தால் கணவனுக்கு ஒத்தாசை செய்யலாம். முடியவில்லை என்றால் துணையாகவே சேவை செய்யலாம். இல்லையென்றால் தேவையானதைத் தந்து பக்கபலமாக விளங்கலாம்.

தன் கணவனுடைய உடல் சக்தியும், மன வலிமையும் தான் வாழ்வின் முன்னேற்றக் காரியங்களுக்குப் பயன்படுவதுபோல, மனைவியின் ஒத்துழைப்பு இருக்கவேண்டும்.

சில்லரைத்தனமாக சிறு காரியங்களுக்குக் கெல்லாம் சண்டைபோட முயல்வதும், பணத் தகராறு போன்றவற்றிலும் பூசல்களுக்கு முயல்வதும், அற்பத்தனமானவைகளுக்கு கூட ஆர்ப்பாட்டம் செய்வதும், நல்ல குடும்பப் பெண்ணுக்கு அழகல்ல. சஞ்சலம் கொடுக்காது, மனைவியே கணவனைக் காக்கவேண்டும்.

சில சமயங்களில் கருத்து வேறுபாடு வரும். வராது என்று சொல்வதற்கில்லை. அப்படி வந்துவிட்டால் வார்த்தை தடித்து, வாதம் அதிகமாகி, அடிதடியில் இறங்கி விடுகின்ற சூழ்நிலையும் அமையலாம். அப்படிவராமல் தவிர்த்துக் கொள்வதுதான் அறிவுடையோர்க்கு அழகாகும்.

வாக்குவாதம் வருவது தவிர்க்க முடியாததாகி விட்டால், அதனால் ஊடல் நிகழ்ந்தால், அந்த சிறு பூசல் அவர்கள் மனத்திலிருக்கும் அறியாமை அழுக்கைப் போக்குவதற்காகப் பயன்பட்ட அருமையான அனுபவமாக அவர்கள் கருதவேண்டுமே தவிர, வேறல்ல என்று சொல்லவேண்டும்.

உடுத்திக் கொள்கின்ற ஆடையில் அழுக்கு படிந்து விட்டால், அதனை சுத்தப்படுத்திட துவைக்கிறோம்; அதுபோல, மன அழுக்கைப் போக்கும் வேலையாக இந்த சிறு பூசலை மதிக்கவேண்டும். ஆடை அழுக்கானால், அதைக் கிழித்து எறிவேன் என்று ஒருவர் முரண்டு பிடித்தால், அவரை எப்படி அழைப்பது?

குழப்பத்தை உண்டு பண்ணக்கூடிய விஷயம் எதுவும் வந்தால், அதனைக் காரசாரமாக விவாதிக்க மனைவி இடம் தரவே கூடாது. அதனை ஆறப் போடுகின்ற பொறுப்பை மனைவியே ஏற்க வேண்டும். பிரச்சினை பெரிதாகாமல் சூடாகாமல் மனைவி பாரத்துக் கொண்டால், கோபம் அடங்கியவுடன், தவறு யார் மேல் என்று தெளிவாகத் தெரியும்.

வந்த தகராறில், தன்பக்கமே ஜெயித்தது என்று தம்பதிகளில் யாராவது ஒருவர் சுட்டிக் காட்டுவதோ, அடுத்தவரைக் குத்திக் காட்டுவதோ கூடாது. அந்தப் பழக்கம் இருந்தால், அறவே ஒழித்து விட வேண்டும். இல்லையென்றால் தோற்றவர் தன் தன்மானத்தைக் காப்பாற்றுவதற்காக, மீண்டும் வேறு ஒரு பிரச்சினையைக் கிளப்ப வேண்டியிருக்கும்.

தன்பக்கம் தவறிருந்தால், கணவனோ, அல்லது மனைவியோ தைரியமாக தன் தவறினை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்றுக் கொள்ள வேண்டும். வீண் கௌரவம் பார்க்காது, வாழ்க்கையை இனிமையாக்கி கொள்வதற்காகவாவது, தவறை ஏற்றுக்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும்.

இதில் முக்கிய குறிப்பு என்னவென்றால், கணவன் மனைவி இருவருக்கும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையானது, தான் என்ற அகங்காரம் இல்லாதபோது தான் வரும்.

“இது நம் குடும்பம், இவர் என் கணவர், இவர் நிம்மதியாக இருந்தால்தான் என் வாழ்வும் இன்பமாக இருக்கும்,” என்ற எண்ணத்துடன் மனைவி இணைந்து இசைந்து நடக்க வேண்டும்.

கணவன் சில சமயங்களில் பெருமைக்காக செலவு செய்வதும், தன்னைப்பற்றியே பெருமையாகப் பேசி மகிழ்வதும் உண்டு. பிறர் முன்னிலையில் மனைவி அவரைத் திருத்த முயல்வதும், கண்டிக்க முயல்வதும் தவறாகும். தனிமையில் இருக்கும்பொழுதுதான், சமாதான முறையில் குறைகளை களையுமாறு அவர் மனதில் படும்படி கேட்கவேண்டும்.

அன்றாட வாழ்க்கை முறையில், கணவன் செய்வது மனைவிக்கும், மனைவி செய்வது கணவனுக்கும் பிடிக்காமற் போகலாம். அதனைத் தீர்ப்பதற்காக அடுத்தவர்கள் உதவியை நாடக்கூடாது. குற்றம் சாட்டக்கூடாது.

இருவரும் மகிழ்ச்சியாக இருக்கும் நேரம் வருமல்லவா! அப்பொழுது தங்களுடைய எண்ணத்தைக்கூறி, தேவையான பழக்கத்தை மேற்கொள்ள பரஸ்பரம் இருவரும் கருத்தைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். எதையும் கேட்கும் முறையில் கேட்டால், நிச்சயம் கொடுக்கப்படும் என்பது இறைமொழியல்லவா!

குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்துவதுதான் தன் கடமை என்பதைத் தெரிந்து மனைவி நடந்து கொள்ளவேண்டும்.

'இல்லாள் அகத்திருக்க, இல்லாதது ஒன்றுமில்லை' என்று பாடுகின்ற ஒளவையார், 'இல்லத்திற்கு இசைந்து வராத பெண் மண்' என்றும் பாடுகிறாரே! பெண் இதனைப் புரிந்து கொண்டால் போதும்.

கணவனுக்கு உடலால், உள்ளத்தால், மனைவி தேவைப்படும்பொழுதெல்லாம் மனைவி நிலையுணர்ந்து பயன்படவேண்டும். அவ்வாறு தேவை நிறைவேறும் பொழுதெல்லாம் இருவரிடையே அன்பும் முகிழ்ந்து வளமாகிறது என்பதே உண்மையாகும்.

அதுபோலவே, மனைவிக்கும் சிறுசிறு தேவைகள் உண்டு என்பதைக் கணவனும் கண்டு கொண்டு, நிறைவேற்றி மகிழவும், மகிழ்விக்கவும் வேண்டும்.

கணவன்மார்களில் பலவிதம் உண்டு. மனைவியிடம் அழகும், கவர்ச்சியுமே அதிகமாக இருக்க வேண்டும் என்பார் சிலர். சரச லீலைகளில் ஈடுபாடும், உடலுறவில் பிடிப்பும் அதிகமாக உள்ளவளே மனைவியாக இருக்க வேண்டும் என்பாரும்; எப்பொழுதும் சந்தோஷமும் கலகலப்பும் உள்ளவளே மனைவியாக வேண்டும் என்பாரும், செலவு செய்யாத சிக்கனக்காரியாக அமையவேண்டும் என்பாரும் உண்டு.

இவற்றை மனைவிமார்கள் புரிந்து கொண்டு தன் கணவன் விருப்பத்திற்கேற்ப நடந்து கொண்டால், நிச்சயம் அங்கு அமைதியே நிலவும்.

தம்பதிகளுக்கு ஒரு சில குறிப்புக்கள்.

மற்றவர் குறையை மறக்கவும் மன்னிக்கவும் தெரிந்து கொண்டு, குணத்தைப் பாராட்டும் பழக்கத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். ஒருவர்மனதில் ஒருவர் உயர்ந்த

இடத்தைப் பிடித்துக்கொள்வது போலவே, உறுதுணையாக வாழவேண்டும்.

சிறுசிறு சச்சரவு வந்தாள் முளையிலேயே கிள்ளி எறிந்து விடவேண்டும். நீரோடு நீர் மோதுவதால் என்ன ஆகிவிடும். கணவன் மனைவி உறவு கீழே விழுந்தால் உடையும் மட்குடம் அல்ல. தப்பிக்கொள்ளும் தங்கக்குடம்.

குறைபார்த்துக் கோபித்துக் குழப்பிக்கொள்ளக் கூடாது! எந்தப்பொருளுக்கும் குறை உண்டு. நீருக்கு நுரையுண்டு. நெல்லுக்கு உமியுண்டு. நிலவுக்கும் கறையுண்டு. பூவுக்கும் புல்லிதழ் உண்டு என்று பழம்பாடல் கூறுவதுபோல், மனிதர்களுக்கும் குறை உண்டு.

ஆகவே, குறையைப் பெரிதுபடுத்தாது, அனுசரித்து வாழ்வதே ஆனந்த மயமான வாழ்க்கையாகும்.

இவ்வாறு நடந்து கொள்வது, மனப்பக்குவம் பெறுவது மிகவும் கடினம் என்கிறார்களே?

'மனைவி தனக்கு அடிமை போன்றவள்: தான் இடும் வேலைகளைச் செய்பவள்: என்னைக் காப்பதுதான் அவளுக்குத் தலையாய கடமை' என்று எந்தக் கணவனாவது நினைத்தால், அங்குதான் சிக்கலே எழுகின்றது.

எவன் தன்னுடைய மனைவியை ஒரு நண்பனாக, நல்ல தோழனாக கருதுகிறானோ, அவனே மகிழ்ச்சியாக வாழ்கிறான். நல்ல நண்பன் நாலாயிரங்கோடிக்குச் சமம் என்கிறார்களே! உயிர் காப்பான் தோழன் என்பது தானே பழமொழி.

தனது வாழ்க்கைப் பயணத்திற்குத் தொடர்ந்துவரும் துணையென்று மனைவியை ஏற்றுக்கொண்டால்,

நினைவெல்லாம் இன்பந்தான். தனது இலட்சியங்களை நண்பனுக்குக் கூறி நல்லாதரவு கேட்பதுபோலவே, வாழ்வின் இலட்சியங்களுக்கு மனைவியைத் துணையாகச் சேர்த்துக் கொண்டு, அந்தரங்க உறவுக்கு அருமையான உறவாக, பணிகளை மேற்கொள்ளும் பக்குவமுள்ள பாங்கராக மாற்றிக்கொண்டால், மகிழ்ச்சியே வாழ்வில் விளையுமே தவிர, மறு எண்ணத்திற்கு அங்கு இடமே இல்லை.

பெண்ணைப் புரிந்து கொண்டு விட்டால் பேரின்பம் என்றாரே புலவர்கள். அது உண்மைதான் என்று முடித்தார் உலகநாதர்.

சுமையாக இருக்கும் என்றல்லவா நினைத்தேன். குடும்ப வாழ்வை, சுவையானது என்றல்லவா நீங்கள் கூறி விட்டீர்கள்!

ஆமாம்! இது என் வாழ்க்கை அனுபவம்! வழிவழியாக வந்த முன்னோர்கள் வழங்கிச்சென்ற நல்ல நூல்களில் நான் கற்ற பாடம்.

வாழ்க்கைப் பயணம் என்பது எல்லோருக்கும் ஒன்று தான், அதில், வாழ்வின் இலட்சியம் மகிழ்ச்சியான வாழ்வு என்பது, எல்லோரும் ஏற்றுக்கொண்ட ஒன்றுதான்.

ஒரு கோயிலை அடைய பல வழிகள் இருப்பதுபோல, மகிழ்ச்சிக் குறிக்கோளை அடைய பல முறைகள் உள்ளன. நல்லபாதையில், நல்ல மனதுடன் நடந்து செல்லும் தம்பதிகள் நலமாகவே நடந்து, நலமாகவே மகிழ்ச்சிக் கோயிலை அடைகின்றனர்.

இருபுறமும் முகத்தைத் திருப்பிக்கொண்டு புறப்படும் தம்பதிகள், இழுத்துப் பறித்துக்கொண்டு நுகத்தடியில் பூட்டப்பட்ட முரண்பட்ட காளைகள் வெவ்வெறு திசை

நோக்கி இழுப்பதுபோல, வேதனையும் விசாரமும் அடைந்து வாழ்க்கையையே நரகமாக்கிக் கொள்கின்றனர்.

இறுதியாக கணவன்மார்களுக்கு ஒரு வார்த்தை!

உங்கள் உயர்ந்த லட்சியத்தை உங்கள் மனைவியிடம் சொல்லுங்கள். அதற்குரிய முயற்சியிலேயே நில்லுங்கள். ஆதரவையும் பெற்றுக்கொள்ளுங்கள். அவளுடன் லட்சியப்பயணம் செல்லுங்கள். சுறுசுறுப்பான மூளை சொர்க்கத்தின் வழிகாட்டி, சோம்பேறியின் மூளை சைத்தானின் தொழிற்சாலை என்பார்களே, அதுபோல, நல்நோக்கும் நேர்மையான உழைப்பும் உள்ள கணவனை, நிச்சயம் மனைவி நேசிப்பாள். துணையாக இருந்து, தூணாக நின்று உதவுவாள். தேனாக விருந்தளிப்பாள்.

மனைவி மனங்கலந்து விட்டால் மகிழ்ச்சிக்குக் குறைவேது! தானே தனக்குத் தலைவனும் என்ற பாடல் போல, தானே தனக்குரிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் தெரிந்தவனே தலைவன்! அவனே நல்ல கணவன் என்றார் உலகநாதர்.

நானும் தலைவனாக இருப்பேன் என்று உணர்ச்சிப் பெருக்குடன் வாசு கூறினான்.

தனது முயற்சியில் வெற்றி பெற்றதாக உலகநாதர் மகிழ்ந்தார். தன் தாயாரை நோக்கி, தன் முடிவை சொல்ல வாசு வீட்டிற்குள் விரைந்தான்.

'மனம் போல் வாழ்க' என்று உலகநாதனின் மனம், வருங்காலத் தம்பதியர்களை வாழ்த்தியது.

வாசுவைப் போன்ற வாலிபர்கள், நாட்டிலேயே நிறையபேர்கள் இருக்கின்றனர். இதயத்திலே எழுகின்ற சந்தேகங்களை யாரிடம் கேட்பது, எங்ஙனம் தெளிவுபடுத்திக் கொள்வது, என்றெல்லாம் மன உளைச்சலில் ஊறியவர்கள் அநேகம், அநேகம்.

கேட்கக் கூடாதவர்களிடம் கேள்விகளைக் கேட்டு, கிடைக்கத் தகாத பதில்களை கிடைக்கப்பெற்று, கிளர்ச்சி பெற்று, கீழான செயல்களில் ஈடுபட்டு கேடுற்றவர்களும் நிறைய பேர்கள் உண்டு.

'சொல்லித் தெளிவதோ சுந்தரக்கலை' என்று உடல் உறவுக் கலையை விவரிப்பார்கள். நாம் இங்கே அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சொல்லித் தெரியாமல், நாளாக, நாளாக மேற்கொள்ளும் பழக்க வழக்கங்களில் கண்டு, மாறி, மாற்றிக் கொண்டு, தெளிவும் பொலிவும் பெற வேண்டும் என்பதே நமது ஆசை.

அதற்கும் மேலே, மனைவியுடன் சேர்ந்து வாழ்வது, மகிழ்ந்து வாழ்வது எவ்வாறு என்பது தான் அடுத்து நிற்கும் தலையாயப் பிரச்சினை. அதனைத்தான் அதிகமாகத் தெளிவுபடுத்த முனைந்தோம்.

வாலிப நண்பர்கள், வாழ்க்கையின் முக்கியத்துவத்தை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

வந்து சேருகின்ற மனைவியின் லட்சியத்தை, ஆசைகளை, மனோபாவங்களை, செயல்முறைகளை நோக்கித் தெரிந்து கொள்ளவேண்டும்.

நமது வாழ்க்கை வசதி என்ன? அதற்கேற்றாற் போல வாழ்க்கை முறையினை அமைத்துக்கொள்ள முடிவு செய்திடவேண்டும்.

வரவு என்ன செலவு என்ன என்பதைவிட, எல்லா செயலிலும் நிலையிலும் இருவரின் பங்கு என்ன என்பது தான் மிகவும் முக்கியம்.

உள்ளத்தால் ஈடுபாடு கொண்டு, உடலால் நல்லுறவு கண்டு, பொருளாதாரத்தால் மேன்மை நிலை கொண்டு, சமூகத்தில் சகலமரியாதைகளையும் பெற்று வாழ இன்றைய இளைஞர்கள், இல்லறத்தின் மூலமாக முயலவேண்டும். முடித்திட வேண்டும். மகிழ்ந்திடவேண்டும். மாபெரும் பணியில் திகழ்ந்திடவேண்டும். வெற்றி வாழ்க்கையை வாழ்ந்திடவேண்டும் என்று விரும்பி வாழ்த்துகிறோம்.



1937-2001

# ஆசிரியரைப்பற்றி

டாக்டர்.எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தனது மாணவர் பருவத்தில் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தவர். சென்னை பல்கலைக்கழக அளவில் மும்முறைத்தாண்டும் போட்டியில் சாதனையாளர். மழலையர் பள்ளி குழந்தைகள் முதல் ஆய்வறிஞர் பட்டம் பெற்ற மாணவர் வரை பாடம் நடத்திடும் வாய்ப்பு பெற்றவர்.

சென்னை பல்கலைக்கழக வரலாற்றில் விளையாட்டுத்துறையில் ஆய்வறிஞர் பட்டம் பெற்ற முதல் மாணவர்.

விளையாட்டுத்துறையில் அதிகமான நூல்களை எழுதி, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு துணை நின்றவர். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

விளையாட்டுத்துறையை சார்ந்த 'விளையாட்டுக் களஞ்சியம்' மாத இதழை 25 ஆண்டுகள் தொடர்ந்து ஆசிரியர் பொறுப்பை ஏற்று வெளியிட்ட பெருமைக்குரிய மனிதர்.

விளையாட்டுக்களின் மேன்மையை சொல்லும் ஒலி நாடாக்களையும், 'ஓட்டப்பந்தயம்' என்னும் திரைப்படத்தையும் தயாரித்து, இயக்கி, நடித்து திரையிட்ட சாதனையாளர்.

மூன்று முறை தேசிய விருது பெற்றுள்ளார். ஒருமுறை தமிழ்நாடு அரசின் விருதையும் பெற்றுள்ளார்.

'திருக்குறள் புதிய உரை' என்னும் நூலில் திருக்குறள் (அறத்துப்பால் மட்டும்) ஒழுக்கம் பற்றி கூறும் உடலியல் நூல் என்னும் கருத்தை முதன்மையாகக் கொண்டு புத்துரைதந்து தமிழுக்கு தொண்டாற்றிய தமிழ்த்தொண்டர்.

ஆர். ஆடம் சாக்ரட்டீஸ்
பதிப்பாளர்.